భారతి.

v. 4. No. 11

Nov 1931


SL

R673:M211/N28

[illegible] 4.11.

13/160

1359

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 11.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| | | |
|---|---|---|
| மலர் ச | பிரசோற்பத்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1931 ஞ நவம்பர் மீ | இதழ் கக |

உள்ளுறை

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சைவ மகிமை ... | ... உகரு |
| சிவஞானபோத விளக்கம் ... | ... உஎகு |
| முருகன் நுண்மாண் ... | ... உஅக |
| ஒரு வேண்டுகோள் ... | ... உஅச |
| திருவிசயமங்கை ... | |
| திருக்கோகர்ண யாத்திரை ... | ... உஅஅ |

14 DEC 1931

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1931 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

உ

சிவமயம்

நம் சமாஜ வெளியீடு.

உடனே வாங்குக.

# தல யாத்திரைப் படம்

விளக்கத்துடன் விலை அணா நான்கு. ஐந்து பிரதிகள் ரூபா 1. தபாற்கூலி வேறு.

இந்தப் படத்திலும் விளக்கத்திலும், பாடல் பெற்ற சிவ ஸ்தலங்கள், நூற்றெட்டு திவ்விய திருப்பதிகள் (விஷ்ணு ஸ்தலங்கள்), திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய ஸ்தலங்கள் வடநாட்டுத் தலங்கள் உள்ள இடங்கள், ரயில்வே வழிகள், ஸ்டேஷன்கள், ஸ்டேஷனுக்கும் கோயிலுக்கும் உள்ள தூரம், மோடார், வண்டி, சத்திரம் முதலிய வசதிகள் எல்லாம் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன. வேறு உதவியின்றி இந்தியா முழுமையும் தலயாத்திரை செய்வதற்கு அரும் பெருந்துணை யிதுவே.

## அறிவிப்பு

நமது சமாஜத்திய இருபத்தாரும் ஆண்டு விழாவைத் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையினர் தங்கள் ஊரில் நடத்திவைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். தலைவர், நடைமுறை முதலிய விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

## சமாஜப் பொதுக்கூட்டம்

நம் சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று 17-10-31-ல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் நடந்தது. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் "மெய்கண்டாரும் மேல்நாட்டுத் தத்துவமும்" என்னும் பொருள்பற்றி ஏறக்குறைய இரண்டுமணி நேரம் மிக அரிய விஷயங்களை யெல்லாம் விரைவாக ஒப்பிட்டுக் கோவை செய்து விளக்கிப் பெரியதொரு செந்தமிழ்ச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திரு. ச. நடராஜ முதலியார் அவர்கள் யாழ் வாசித்துத் திருமுறை ஓதினார்கள். தலைவர் முடிபுரையும் உதவிக் காரியதரிசியால் நன்றி கூறலும் முடிந்தபின்னர் சபை கலைந்தது.

நமது சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கீழ்வரும் விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்வதற்காகச் சென்னைக் கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, 150-வது எண்ணுள்ள இல்லத்தில் 1931ஆு நவம்பர்மீ 30உ திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்குக் கூடும். அன்றைய தினம் கூட்ட நிறைவெண் (Quorum) இல்லாவிடில் அக்கூட்டம் அதேயிடத்தில் அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை (1-12-31) மாலை 5-30 மணிக்குக் கூடி வருவோரை வைத்து முடிவுபெறும். ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயங்கள் :—

(1) சாதாரண அங்கத்தினர் சந்தாவை இரண்டு ரூபாயாக மாற்றுதல்.

(2) "சித்தாந்தம்" பத்திரிகையின் நடைமுறையில் மாறுதல்கள்.

(3) திருவாசகத்தை உரையுடன் வெளியிடுதல்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம்,

காரியதரிசி.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,<br>150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,<br>சென்னை. 10—11—1931

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

No.—
14 DEC 1931
MADRAS


# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதந் வாணியை உள்நாடு "

| மலர் ச | பிரசோற்பத்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1931 ௵ நவம்பர் ௴ | இதழ் கக |
|---|---|---|


## சைவ மகிமை *

[ச. சச்சிதாநந்தம் பிள்ளை]

" ஆடும் பரிவே லணி சேவலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியானை சகோ தரனே "

" இதயபங்கய குகாமே குகை
என்ப தாரிய பாடையில்
அதனுளாய சிதம்பரத் தளி
யமலஞான விண் மெய்யனுச்
சததமுஞ் சுக நடனமேபுரி
தம் பிரானையொர் குகனெனுக்
கதறுமா மறையவனை யன்றெரு
கடவுளை மறியோமரோ "

" பத்தியும் ஞானமும் பாவிடு மார்க்கம்
எத்தனை யோவகை யிருக்கினு [illegible]
முத்திதந் தனுதின முழுப்பல னல்கச்
சத்திய மாவது சரவண பவவே "

இவ்வுபந்நியாச அறிக்கைத் தாளின் தலைப்பிலுள்ள " உருவாயருவாய் உளதாயிலதாய்.......வருவாய் அருள்வாய் குகனே " என்னும் பாடல் அருணகிரியார் வாக்கன்று. புஷ்பரத செட்டியார் முதன் முதல் அச்சிட்ட கந்தரனுபூதிப்ப திப்பினின்றும், "தூசா

* இது, சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகானந்த நிலையத்'தில் 17-2-1919-ல் ஸ்ரீமத்-பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் செய்தருளியதொரு அரிய விரிவுரையின் சுருக்கமாகும். அவ்விரிவுரை நிகழ்ந்தபோது யான் எழுதி வைத்த குறிப்புகளின் துணைகொண்டு இந்தக் கட்டுரையை இப்போது வரைந்துள்ளேன். பன்னீராண்டுகட்கு முன்னர் எடுத்த குறிப்பை விரித்தெழுதுங்கால், எழுதும் என்னறியாமையாலும் மறதியாலும் குறிப்பின் குறைபாட்டாலும் பல பிழைகள் நேருதல் கூடும். ஆயினுமிதில் என் கருத்தெதையும் சேர்த்திலேன். இதிற் காணும் குறைகளனைத்தையும் சிறியேனுக்கும், நலங்களனைத்தையும் அடியேன் ஆசிரியராகிய ஸ்ரீமத்-சுவாமிகளுக்கும் உரிமையாக்குதல் அறிஞர் கடன்.

குறிப்பு நினைப்பூட்டு மளவில், கருத்துக்கள் மட்டுமன்றிச் சொற்களும் சுவாமிகளுடையனவாகவே இருக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் இதை எழுதுகின்றேன்.

ச. சச்சிதானந்தன்.

மணியும்....பேசா அனுபூதி பிறந்த துவே'' என்னும் பாட்டோடு முடியும் சகூ பாடலை மட்டுங்கொண்டது அந் நூல் என்று உணரலாகும். அக்காங் கள் நிக ஆதல்பற்றிப் போலும் எட் டுப் பாடல்கள் பின்னர்ச் சேர்க்கப்பட் டன.

மேற்சொன்ன சகூ-ம் செய்யுளோடு கந்தரனுபூதி முடிகின்ற தென்பதே என் கொள்கையும்.

ஆன்மாக்கள் சார்ந்ததன் வண்ண மாந் தன்மையுடையன. யான் இன்று கூறுவது மஹாத்மத் தன்மையை யடைந்த பேர்கள் நீங்கிய ஏனையோ ரைக் குறித்ததாகும். அதைக் கேட்டு, அதன் பொருளைச் சார்ந்து பயனுறு வீர்களென்பது என் கருத்து.

இன்று யானெடுத்துக்கொண்ட விஷ யம் சைவ மகிமை என்பது. சிவசம்பந் தம் சைவம். இச்சம்பந்தம் எதனால் ஏற்படுவது? தீக்ஷையினலா? அதீக்ஷி தர் காணுதுண்ணலினலா? புலாலுண் ணுமையினலா? அல்லது பரம்பரை யாய் ஒரு குலத்திற் பிறந்த தன்மை யினலா என்று கவனிக்கவேண்டும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் எல்லோருக்கும் தீக்ஷை செய்யப்பட வில்லை. ஆகையால் தீக்ஷையே சைவம் என்று சாதித்தல்கூடாது. இப்படிச் சொல்லுவதால் தீக்ஷைசெய்துகொள்ள வேண்டாமென்று யான் சொல்லிய வனுகேன். அறுபத்து மூவருட்பலர் அதீக்ஷிதர். அதீக்ஷிதர் காணுமலுண்ப தால் பெறும் ஞானமென்னே? அதீ க்ஷிதரோடு விவாக சம்பந்தங் கூடா தென்னுங் கட்டுப்பாடு அவரவர் குடும்ப லக்ஷணத்தையொட்டி எழுந்த தொரு வரம்பென்ன. [illegible]ருள்ளும் பெருதாருள்ளும் நல்லவரும் தீயவரும் இருக்கக் காண்கின்றோம். ஆதலால் தீக்ஷை பெற்றுக்கொள்ளன் மாத்திரையாலேயே இச்சிவ சம்பந்த உணர்ச்சி ஏற்பட்டுவிடுமென்று சாதிக்க இயலாது.

இனிப் புலாலுண்ணுமையைப் பார்ப் போம். புலாலுண்ணல் அநாசாரம். ஆனால் புலான் மறுக்கும் ஆசாரம் ஒன் ருல் மாத்திரமே ஒருவற்குச் சைவம் சொந்தமாய்விடாது. ஆகும் என்ருல் ஆடு, மாடு, யானை, ஒட்டை முதலிய சாகபக்ஷிணிகளுக்குச் சிறப்புச்சொல்ல நேரிடும். ஆகையால் புலாலுண்ணுமை யை நல்ல ஆகாரம் என்ற அளவிற் போற்ற வேண்டுமேயன்றி, அதுவே சைவம் என்னல் அடாது.

இவை போன்றே, வேறு சில அரு மைகள் தாமும் சைவமாகிவிடமாட்டா. 'பூமிக் குழிக்குள் யானிருப்பவன். ஆத லால் யான் சைவன்' என்னலாகாது. என்னை? குழிக்குள்ளிருக்கும் தவளை யும் சைவமாகுமாதலின். ஒருவன், 'யான் தலையில் காலைமாட்டித் தலை கீழாய்த் தொங்கவல்லேன், இது சிவத் துவ மல்லவா' எனின், வௌவாலும் அவ்வாறு தொங்குகிறதே என்க. 'யான் ஊர்களில் வசிப்பதில்லை, மலை வனங்களிலேயே சஞ்சரிக்கின்றேன். ஆதலின் யான் சைவன்' எனின் பிராணிகள் பல அப்படி வசிக்கின் றனவே என்க. 'யான் தண்ணீரில் செபிக்கின்றேன். ஆதலாற் சைவன்' என்று கூறில், அவர் செபிப்பது யாது? சிவமந்திரந்தானே அன்றோ என்று சோதிக்க வேண்டும். அஃதாயின் மீனைக்காட்டினும் விசேட முண்டு என்று கூறலாம். 'புண்ணிய தீர்த்தத் தில் மூழ்குவதால் யான் சைவன்' என்

187160



னில், மீன்கள் ஏகதேசமாக வன்றி எப் போதும் அப்படி மூழ்கியுள்ளனவே என்க. 'நல்ல பாடல் பாடுகின்றேன். அதனல் யான் சைவன்' என்னில், வானம்பாடியும் குயிலும் இனிமை யாய்ப் பாடுகின்றனவே என்க. 'சை வத் திருமுறை வைத்துக்கொண்டு பாராயணம் பண்ணுகின்றேன்' என் னில் அது மிக நல்லதேயாயினும் அஃ தொன்றினல் மட்டும் ஒருவன் சைவ ணுய் விடுமாறில்லை என்க.

இவ்வாறே உள்ளானைப் போலும் மாடப் புறவைப்போலும் நிற்றலாலும் சைவம் வாய்த்துவிடாது. பாம்புபோல் சின்னுள் வாயுபக்ஷணம் பண்ணுதலா லும் பட்டினியாயிருத்தலாலும், காட் டுக் கழுகுபோல் சருகுண்பதாலும்பற வைபோல் ஆகாயத்தில்பறத்தலாலும், பூசஞ் சாரம் செய்வதாலும் அது சித் திப்பதில்லை.

இப்படியே மூச்சடக்குவதனலும் தனிச் சிறப்பில்லை, முத்துச் சலாபங் குளிப்பார்க்கு அது கைவருமாதலின். 'யோகிகள் பிராணயாமம் பற்றி எழுதியுள்ளார்களே' என்னில், சிவ யோகிகள் எழுதி யிருந்தால் அது பற்றி யோசிப்பாம் என்க. தேகாப்பி யாசத்தால் தேகம் வலுப்படுவது போ லப் பிராணயாமத்தால் வாதபித்த சிலேத்தும சமத்துவம் உண்டாகலாம். ஆனல் ஆபத்தும் விளையலாம். துருத் தியைக் கும்பித்து யானும் இளமையில் பிராணயாமம் சில காலம் செய்தேன்; அது வேண்டாமென்று உணர்த்தப் பட்ட பின்பதை நிறுத்தினேன்.

"எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரியயற் கரியானை அயர்த்துப் போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே"

"கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி இருந்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழிந்துவான் நோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றி நன்கில்லையே"

"வேத மோதிலென் சாத்திரங் கேட்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்க மோராறு முணரிலென்
ஈசனை யுள்குவார்க் கன்றி யில்லையே"

"கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லானர்க் கல்லாற் பயனில்லையே"

"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னுலு மானுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்க னெடொக்குமே"

என்னும் அப்பர் திருவாக்குகளை ஊன் றிப் பார்க்க. யான் மேலே கூறியவை தவத்திற் குரியவை எனினும், அவை சிவத்தை முன்னிட்டுச் செய்யப்படா விடின் சைவத்திற் குரியனவாகா.

"அவனை யொழிய வமரு மில்லை
அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவனன்றி மூவரா லாவதொன் றில்லை
அவனன்றி யூர்புகு மாறறி யேனே"

என்ற திருமந்திரத் திருவாக்கை யுன் னுக.

சிவம் என்பது அந்வய நாமம். முத் திக்குச் சிவம் என்னும் பேருண்டு. எனவே முத்தி விரும்புவோரெல்லாம் சைவர் என்று கோடல் கூடும்.

சிவத்திற்குத் தடத்த லக்ஷணம் எனவும் சொரூப லக்ஷணம் எனவும் இரண்டு லக்ஷணமுண்டு. இவற்றுள் தடத்த லக்ஷணச்சார்பாக மட்டும் இங் குச் சிலவிவகரிப்பேன். திருநீறு, திருக் கண்மணி, சிவ மந்திரம், சிவஞுருத் தியானம், சிவனடியவர் பூசை ஆகிய இவை சிவ சம்பந்தமாகி ஒருவனைச்

சைவனென நிறுவும். இவையுடையானைச் சைவனென அழைக்க யாதொரு தடையுமில்லை. இவற்றுள் ஒன்றிரண்டு பொருந்தாவிடினும், இரண்டு முக்கியம். அவை சிவநாமோச்சாரணமும் சிவனடியார் பூசையும். சிவமந்திரம் பல விருப்பினும் சிவ சப்தமுள்ள மந்திரமே சைவத்திற்குரியது. அச்சப்தம் முற்றும் சிவமந்திரம். அதனோடு ஒட்டி வேறு எதையும் சேர்க்கலாகாது. அச்சப்தம் சிவனை முன்னிட்டிருப்பது; சிவனாணை வழிநிற்றலும் கேட்கப்படும். எனவே 'சைவன்' என்னுஞ் சொல் மிகச் சிறப்பாக ஏற்படுவது. சிவனது மகிமை எங்கெங்குச் செல்லுகின்றதோ அங்கெல்லாம் இச்சப்தமும் எழும்.

இச்சிவமூர்த்தியின் விடயமாக ஒரு நிலை எல்லாத் தத்துவங்கள் வரையிலுமுள்ளது. இது சமய நிலை. மற்றொன்று தத்துவாதீதமானது. இது சமயத்திற்குப் புறம்போ எனின், அன்று.

"சைவசமயமே சமயம்
  சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி
  காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி
  புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச்
  சேரவாருஞ் செகத்தீரே."

என்னுந் தாயுமானார் திருவாக்கைக் கருதுக. பிறசமயங்களைப்பற்றி யான் பேச வரவில்லை. அவைகளைப்பற்றிப் "பொய் வந்துழலும்" என்று தாயுமானார் புகன்றதன் கருத்தை, 'சமயாதீதப்பழம்பொருள்' என்றதை விளக்குமுகத்தால் புலப்படுத்துகின்றேன்: சைவ சமயம் ஒரு மரம்போன்றது. அதில் இலை, அரும்பு, காய், கனி உண்டு. கீழ்நிலையினும் மேல்நிலை ஏற்றம். எங்கே ஆதி ஏற்பட்டதோ அங்கே அந்தமுமுண்டு. பழத்தில் வித்துண்டு. மேற்பாடலில் 'பழம்பொருளை' என்பதற்குப் 'பழமாகிய பொருளை' என்று பொருள் கொள்ளலாம். அதனைச் சைவம் தன்பாற் கொண்டுள்ளது. கிளையிலுள்ள வரை பழம் மரத்தோடு சேர்ந்தது. கிளையை விட்டு நீங்கின பின்பே புசிப்பர் மானிடர். அப்படி வேறுபடுத்துந் தன்மையில் சைவம் சமயாதீதமாகின்றது. ஆனால் அப்போதும் அதுபழமே. கொம்பரை விட்டுக் களைந்ததுதான் வேறுபாடு. சமயமே "சமயங் கடந்தமோன சமரச"மாய் விடுகின்றது. ஆனால் பழந் தின்றவன் காய் தின்றான் என்னும் நுட்பத்தையு முணர்க.*

ஆயின், ஒவ்வொருவனும் வரிசையாகத்தான் சமய ஏணிப்படியிற் போக வேண்டுமோ? சாமுசித்தனாவான் முற்பிறப்பில் விட்ட விடத்திலிருந்து, இப்பிறவியில் தொடங்குவன். "எப்போது

* இங்கு, கீழ்வரும் மேற்கோளைக் கருதிக் கோடல் பயனுடைத்தாம்:—

"சைவ சமயமே சமயம்" என்றதிலுள்ள ஏகாரம் குழுவினின்று பிரிக்கும் பிரிநிலையாம். அணிதற் பொருடரு தேற்றேகாரமெனினுமிழுக்காது. "சைவ சமயம்" என்பது தளிர்த்துப் பூத்துக் காய்க்குமொரு தருவொக்கும். "சமயா தீதம்" என்பது அத்தருவிற் பழுக்கும் பழம் கொம்பரைவிட்டு நீங்கி அனுபவிப்பார்க்கு அனுபவப் பொருளாதலொக்கும். "இல்லது வாரா"து எனு நியாயத்தின்படி இருந்து பழம்போல வெளிப்படத்தக்க அது "பழம்பொருள்" எனப்பட்டது.

—ஸ்ரீமத் சுவாமிகளே அருளிச்செய்த
சைவசமய சரபம் :
பக்கம் உஎசு-உஎஎ—சு. க



விரத்தி தோன்றிற்றோ அப்போதே ஞானநெறி நிற்க" என்பது சுருதி. இதற்குக் காலவரம்பில்லை. சரியை கிரியை யோகங்களை எந்நாளும் ஒவ்வொருவனும் செய்யவேண்டுமென்னல் தவறு. வேண்டுமென்னில், ஒருநாளும் முத்தியில்லாமற் போம்.

இங்ஙனம் கூறிய சைவ சமயம் இறைவனனுக்கிரகத்திற்கு நிலைக்களமாய் விளங்குவது. இவ்வநுக்கிரகத்தை ஐம்முகச் சிவம் அறுமுகச் சிவம் என்னும் இரண்டு மூர்த்தி விஷயமாய்ப் பெறலாகும். இங்கு ஐம்முகச் சிவனைப் பற்றிப் பேசுவல். சாதகற்குச் சமய ஏற்பாடு அவசியம். அஃதில்லாவிடில் அவன் முபற்சி, காலில்லாதவன் நடக்க முயலுவதை யொக்கும். மக்கள் வாழ்க்கைக்கு ஏதோ ஒரு சமயம் வேண்டும்.

'திக்பஸ்ம ரஹிதம் பாலம், திக்ராமம் அசிவாலயம் திக் அநீசார்சனம் ஜன்ம திக்வித்யா மசிவாச்ரயாம்' என்னும் சுருதி யாரை நோக்கிக் கூறுகின்றது? பொதுவில் யாவரையும் நோக்கியே. இந்த பிருஹஜ்ஜாபாலச் சுருதியின் பொருள்: "பஸ்ம மணியாத நெற்றியைச் சுடு. சிவாலய மில்லாத கிராமத்தைக் கொளுத்து. சிவார்ச்சனை இல்லாத ஜன்மத்திலே தீயை வை. சிவனை யாச்சிரயிக்காத சாத்திரத்தை எரித்து விடு" என்பதாம். எனினும் சிவனடியார்க்கு அது சிறப்பு வகையில் முக்கியமாகும். "பூத்யின ப்ரமதி தவ்யம்" என்னும் தைத்திரீயம் திருநீற்றை விடக்கூடா தென்று வற்புறுத்தி ஆணையிடுகின்றது. சிலர், 'மனக்குவிவைப்பற்றி இப்படி வற்புறுத்தாது சாம்பற்பூச்சுக்கு இந்த மகிமை தருவது எற்றுக்கோ? திருநீறணிக வென்னும் விதி அவசியம் தானோ', என்று ஆசங்கிப்பர். கடவுள் எதை எதை ஏன் அமைத்தார் என்று நாம் காரணஞ் சொல்ல முடியுமா? ஒரு மரத்தில் பூக்கள் பல நிறத்தோடு பூத்தற்குக் காரணங் கூற முடியுமோ? முகத்தில் இரண்டு கண்ணுமிருப்பானேன்? பின்புறமேன் இருகண்களில்லை. இப்படிப் பல கேட்கலாம். ஆகையால், எது சிவனால் கட்டளையிடப்பட்டதோ அதைச் செய்க. 'செய்யாமலிருந்தாலென்ன' என்பதுகடவுள் கட்டளையை மீறினாலென்ன என்று கேட்பதேயாகும்.

ஆனால் இங்குக் கவனிக்க வேண்டியது, இது கடவுள் கட்டளை தானோ என்பது. 'மந்திரமாவது நீறு' 'வேதத்திலுள்ளது நீறு' என்றெல்லாம் எழும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கே சாக்ஷி. அவர் அதுகொண்டு சமணக் கூன்பாண்டியன் சுரந் தீர்த்தார். அச்சுரத்தைத் தீர்க்க அவர்க்கு வேறு வகையிருந்தும், சைவ சின்னமாகிய விபூதியைக் கொண்டு நீக்கி அதன் பெருமையை நாட்டினார். நோயைக் கொல்ல விபூதி கருவியாயிற்று. சிவபெருமான் திருவுள்ளத்தை நாமறியாவிடினும் இக்காரியத்தில் இடபத்தி யுண்டாக வேண்டும். வேறு மருத்துவ நூற் காரணங்களுமிருப்பினுமவை ஈண்டுவேண்டப்படா. சிவனாணைக்குக்கீழ்ப்படிக. "வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்மநாமஞ்சு மாறே" என்றவிடத்து, சிவவழிப்பட்டார்க்கு இது போதிக்கத்தக்கது. படாதார்க்குப் போதிக்கத் தக்கதன்று என்பது மணிவாசகர் கருத்து. ஒரு சமய இனத்தவரென்னும் சமய ஒற்றுமை நோக்கி இங்ஙனம் அருளினாரென்று நினைக்கின்றேன்.

இங்கு ஒரு சிறிது சைவ சமய குரவர் பெருமையைக் குறிக்கக்கடவேன். அவர்கள் தெய்வ மகிமை பெற்று விளங்குவோராவர். வடமொழியில் பல ஆசிரியன்மார்கள் நூல்களுள. ஆனால் அவையெல்லாம் அவ்வம் முனிவர்களருளிய மொழிகளே என்பதற்குச் சான்றில்லை. அன்றியும் அவை மிகவும் பண்டையன. ஆனால் நால்வர்கள் கருத்துக்களை அறிவிக்க அவர்கள் அருட்பாடல்களே உள்ளன. அவை எழுந்த காலமும் இரண்டல்லது மூன்றாயிர ஆண்டுகட் குட்பட்டதே. பதினெண் புராண வாக்கியங்களனைத்தையும் வியாச வாக்கியம் என்ன முடியாது. பிரம சூத்திரமட்டும் அவர் வாய்மொழி யென்னலாம். பாடியம் எழுதினோர் சுருதி துணைகொண்டு பலவாறு எழுதி, அவரவர் உரையையே ‘சுருதி சம்மதித்தது,’ ‘சாஸ்வதி ஒப்பியது’ என்றெல்லாம் உயர்த்திக் கூறலாயினர். இந்நூல்களை யெல்லாம்விட நம்சமயாசாரியர் அருளிப்பாடுகள் சிறந்தவை. அவர்கள் செயல்கள் சிவன் ஒருவ[illegible]ளன் என்பதைக்காட்டுகின்ற[illegible] யும் நம்பாத ஒருவனும்[illegible]. இதை [illegible] வேறெதைத் [illegible] செய்வான்? மற்ற பல நம்பிக்கைகளிலும் அவர்கள் வாக்கியங்களை நம்பல் சிறந்ததாகும். அவர்கள் பாடல்களைச் சிவபெருமான் அங்கீகரித்துள்ளார். அவர்களை நம்பினோர் அவர்கள் அடைந்த இடத்தை அடையலாம்.

இனி ‘உருத்திராக்க’ மென்பது ‘ருத்ரம்’ ‘அக்ஷம்’ என்னும் இரண்டு சொற்களாலாயது. அதன் வரலாறு நீவிரறிந்ததே. அதுவும் சிவசம்பந்தமுடையது. திருநீற்றிற்குள்ளது போலவே இதற்கும் மகிமையுண்டு.

சிவமந்திரமாவது மறக்கக் கூடாததோர் தெய்வவொலியென்று சுந்தரமூர்த்தி நாயனார் “நற்றவா வுன்னை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே” என்னும் அரிய மொழிகளால் அறிவுறுத்தியருளினார். இம்மந்திரம் வேத இதயத்துள்ளது. சைவர்க்கு இது இன்றியமையாதது. ‘மந்திரம்’ என்னுங் கிளவி, நினைப்பவனைக் காப்பது என்னும் பொருளுடையது. இச்சிவமந்திரத்தைத் தூலம், சூக்குமம் காரணம் என்று நூல்கள் பிரிப்பினும் அவையெல்லாம் உண்மையில் ஒரே பயனுள்ளவையே. ஆகமக்காரர் இதில்பதி பசு பாச லக்ஷணங்கூற முற்படுவர். எனக்கு இதில் தடையில்லை. இம்மந்திரம் செபிப்போர் பிற மந்திரமெதையுங்கையாளார். பின்னர்க் காரணங் காட்டுவல். எனது கோட்பாட்டை,

“மடமோட்டும் கருணைதனை மறவேன்
நெஞ்சுள வளவுமாற் றூர்நூலைத்
தொடமாட்டே னவருரைக்கு முரைகே[illegible]
னனியாயத் தொடக்க[illegible]
படமாட்டே[illegible] கோட்குட்
[illegible]னருள்சுரந்து வினையவொரு
மொழிப்பயனிற் படரு நோக்கம்
விடமாட்டே னினிதளித்தி யெனதுகுகப்
பிரமமென விளங்கெம் மானே”

என்னும் பாட்டுணர்த்தும்.

ஆசாரிய சுவாமிகள் நால்வரும் ஒரே தெய்வ உபாசகர் என்பதைச் சைவர்கள் கருத்தூன்றிப் பார்க்கவேண்டும். பின்வரும் எடுத்துக் காட்டுகளைக் கருதுக :

“கருமா னுரியாடைக்
கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லால்
பேணா துள்ளமே” —சம்பந்தர்.

“சென்றுநாம் சிறுதெய்வம்
சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே
சேரப் பெற்றோம்” —அப்பர்.



“மறிசே ரங்கையனே
மழபாடியுண் மாணிக்கமே
அறிவே உன்னையல்லால்
இனியாரை நினைக்கேனே”
—சுந்தரர்.

“கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்லால்
நரகம் புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப்பெறி னிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்லா
தெங்க ளுத்தமனே”
—மணிவாசகர்.

இங்ஙனமே அருணகிரிநாதரும்,

“படிக்கின் றிலைபழ நித்திரு
நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென்
கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த
மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச
மேது நமக்கினியே”

என்று முடிவாகக் கூறுகின்றார். இன்னன பல்ல. இந்நிலை வடமொழிமறைக்கும் சம்மதமானது.

உதாரணம் :

(அ) “சிவ ஏகோத்யேயச்
சிவம்கரஸ் ஸர்வமந்யத் பரித்யஜ்ய”
(அதர்வசிகை.)

[பொருள் : ‘அந்நியமான யாவையும் விட்டு, சிவமெனும் பெற்றியால் மங்களத்தைச் செய்யும் சிவனையே தியானிக்க வேண்டும்.]

(ஆ) “தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்யத் யேயாந்
விஷ்ண்வாதி காந்ஸுராந்
சிவஏவ ஸதாத்யேயஸ் ஸர்வ
ஸம்ஸார மோசகஃ”
(சரபோபநிஷத்.)

[பொருள் : ஸம்ஸார துக்கநாச முக்திப் பிராப்தியின் பொருட்டு விஷ்ணு முதலிய ஸர்வ தேவர்களையும் விட்டு என்ஞான்றும் தியேயனாகவுள்ள சிவனையே தியானிக்க வேண்டும்.]

இவை போன்ற பிரபலப் பிரமாணங்கள் ஒருவனுக்குப் பல மூர்த்தி வழிபாடு கூடாது என்று கூறுவது நன்றாய்த் தெரிகின்றது. ஒரே மூர்த்தியும் ஒரே மந்திரமும் வேண்டும். இதைச் சைவர் நன்கு கவனிப்பதில்லை. பல தெய்வ வழிபாடு அவர்கட்குக் கூடாது. சொரூப லக்ஷணத்திற்குப் போனால் எல்லை ஒன்றும் ஏற்படாது. அது ஞானிகட்குரியது. ஏனையோர் உருவத்தைப் பற்றிச் செல்வோர், சரியையாதி மூன்றும் மூர்த்தியைப் பற்றியவை யாதலின். சொரூபம் மூர்த்தமல்ல. மூர்த்தி அதற்கு ஆசாரியன். பெரும்பாலோர் சாரூபத்திற்குள் நிற்போர். இவர்கள் ஒரே மூர்த்தியை வழிபடாவிடின், பொதுக் கதிக்குரியராய் இந்திரபத மட்டும் கிடைக்கப் பெறுவர். தியானமென்பதும் ஒரு மூர்த்தி பாவனையிலாவது ; இரண்டு மூர்த்தி யுபாசனை கூடாது. இப்படிச் செய்வது, ஒரு கோயிலை இடித்து இன்னொரு கோயிலைக் கட்டுவதையொக்கும். சிவனையே கதியாகக் கொள்பவன், விண்டுவாதி தேவர்களை விட வேண்டும். பிற மூர்த்தி யுபாசகர்கட்கும் இதுபோன்ற நியமம் ஏற்றதே. ஆனால், மற்ற தேவர்களைக் கண்டால் பொதுவகையில் வழிபடுமின். பல சில்லரை மந்திரங்களை விரும்பன்மின். எத்துன்பம் வரினும் உம்மொரு மூர்த்தியையே கொண்மின். ஆசாரிய சுவாமிகள் நால்வரும் சிவனைத் தவிர வேறெத் தெய்வத்தின்மேலும் பாடவில்லை. கருதுமின். அவர்கள் காலத்துக்கு முன்பு பல தெய்வ வழிபாடிருந்

தது. அவர்கள் ஒரே தெய்வம் வேண்டுமென்று வற்புறுத்தினர்.

கிறிஸ்துவ மதத்தில் கிறிஸ்துநாதரே மூர்த்தி ஸ்தானத்திலுள்ளார். இஸ்லாத்தில் முகம்மது நபி அந்நிலையில் நிற்கின்றார். இவ்வுண்மைகளையெல்லாம் கருதி, சைவ சமயாசாரியர்கள் உபதேசித் தருளியபடி சைவர் ஏக மூர்த்தி வழிபாட்டில் உறைத்து நிற்கக் கடவர்.

உங்கட்குச் சிவன்கூட வேண்டியதில்லை; சம்பந்தரைப் பற்றினால் சாலும். இவரைப் பற்றினால், சிவனைப் பற்றியுள்ள இவர், அவரிடம் உங்களைச் சேர்ப்பர். சீகாழிக்கண்ணுடைய வள்ளலார்க் கிம்முறை பயன்பட்டது.

"என்னாணை யென்னாணை
யென்னாணை யேகமிரண்
டென்னுமற் சும்மா
இருவென்று—சொன்னான்
திருஞான சம்பந்தன்
சீகாழி நாட
னருளாளன் ஞான
வினோதன்"

என்னும் அவர் திருவாக்கால் உணர்க.

முத்தியிலிருப்பவர் தோன்றுவரோ என்று ஐயுறவேண்டா. திருவுளப் பாட்டின்படி எதுவுமாம். அதனால் அவர் முத்திநிலை கெடாது. இப்படிப் பலரிருக்கலாம்.

இப்பெருநிலை இந்நாட் சைவர்க்கு வெகு தூரமாய்விட்டது. நால்வர் பாட்டைத்தாளம் போட்டுப்பலர் பாடுகிறார்கள். ஆனால் பல தெய்வங்களையும் கும்பிடுகிறார்கள். இச்சென்மம் கடைத்தேறுதற்கு ஒரு தெய்வ வழிபாடு அவசியம். இது செய்யாதவன் முத்தி மார்க்கத்தின் முதற் படியிலும் கால் வைக்காதவன் என்று கட்டுரைக்கின்றேன். அன்புடையீர்! காட்டேரி, மாரி முதலியவற்றைக் கும்பிடாதீர்கள். அதனாலுங்கள் பத்தி கெடும். அத்தேவதைகளே வந்து கேட்டால் உணவு கொடுங்கள். நீங்களாக வரவழையாதீர்கள். நீங்கள் வணங்கற்குரிய ஏக மூர்த்தியை முற்றிலும் நம்புங்கள். வினைவழி துன்பம் வரும். வந்தாலும் அம்மூர்த்தி வழிபாட்டில் நழுவாதீர்கள். வீடுவாசல் போகத்தான் வேண்டும்.

"வானமிடிந்து தலையில் விழும்படி
வம்புவந்தாலும் என்னை—அந்தக்
கானமயில் முருகையன் திருவருள்
கைவிட மாட்டாதே"*

என்னும் உறுதிப்பாட்டை உய்த்துணருங்கள். தன்னுயிர் போமளவும் இயேசு நாதர் கடவுளை விடவில்லையே! கருதுங்கள். பல தெய்வ வழிபாடுடையானொருவனை நோக்கி, "நீ யாருடைய பத்தன்" என மற்றொருவன் வினவின், அவன் என்ன சொல்லுவான்? பசபசவென விழிப்பானன்றே! 'ஆண்டவன் பத்தன்' என்னலிற் சாரமில்லை! பொதுவாதலின். அன்னாற்குச், சிவசந்நிதியிற் பாத்தியமில்லை.

இந்நாட்டில் எழுந்த அநந்த நூல்களில் சிவனே பிரபல மூர்த்தியாயுள்ளார். அவருக்குப் பல வடிவமுண்டு. மண்டை மாலையும் கோரரூபமும் உள்ளனவே என்னில், அக்கோலம் சங்கார கிருத்திய மூர்த்தியாகிய ஒரு மூர்த்திக்குத்தான் உண்டு. சிவன் நிரம்ப அழகிய மூர்த்தி. இரு கரங்களோடுங்கூட வருவார். இயமனுக்குக் கூட இச்சத்தியுள்ளது. இராமர் ரிஷி

* இது சுவாமிகள் அருளிச்செய்த திருவலங்கற்றிரட்டிலுள்ள சமாதான சங்கீதத்தின் சரணங்களி லொன்று. (திருவலங்கற்றிரட்டு - பக்கம். ௩௨௧.) —க. க.



பத்தராதலால் அவர் கடைசிக்காலத்தில் இயமன் ரிஷியாய் வந்தான். இயமனுக்குள்ள இச்சத்தி சிவனுக்கா இராதா? சிவனுக்குத் தன்னுபாசகர் வேண்டு முருவமெல்லாம் எடுக்கும் ஆற்றலுண்டு. எப்போதுமே மண்டை மாலையுடையவராவரென் றெண்ணற்க. எப்போதும் அவர் கொண்டுள்ள வடிவம் மகரிஷி வடிவம். ரிஷிகளால் வேண்டப்பட்டு அவர்கட்கு நாயகமாய்ச் சிவனார் விளங்குவர். ரிஷிகளை அரசர் வணங்குவர். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று புகழப்படுந் தன்மையுடையரே யெனினும், அரசரை ரிஷிகள் வணங்கார். இப்பெருமையுடைய ரிஷிகளுந் தேவர்களும் மனிதர்களும் வணங்கும் மஹரிஷி சிவனென்றுணர்மின். ஆதலின் அவரை வணங்குவோரே மோக்ஷம் பெறுவர். பிற தேவரெவரும் தம்முபாஸகர் மனிதராய் வந்த பிறகுதான் தம் கதி கொடுப்பர். ஆனால் கதி நாயகரான சிவனாரோ அஃறிணை யுயிர்ப் பொருள்கட்கும் பரகதி கொடுத்துள்ளார். குரங்கு, கரிக்குருவி, பைஞ்ஞீலி வாழை முதலியவற்றிற்கும் முத்தி நல்கிய செய்தி கருதுக.

இதுகாறும்விவரித்தவாற்றால், சைவர்க்கு வாய்த்த சிவமாந் தெய்வமும், சிவமந்திரமும் உபகரணமும் பெருஞ் சிறப்புடையன என்பது போதரும். இப்பெரும் ஆதிக்கியத்தைக்கைவிட்டு, சைவர் ஏன் விலக வேண்டும்? கிறித்துவர், முகம்மதியர், புத்தர் முதலிய மதத்தினர் தத்தம்நிலை நல்லதென்று கொண்டு அதன் நெறியிற் செல்லா நிற்க, சைவர் மட்டும் ஏன் தங்கள் பெரும் பாக்கியத்தை உதைத்துத் தள்ளவேண்டும்? அது பெரும் பாவமாகுமன்றோ!

இங்கோர் மறைபொருளா யுள்ள உண்மையை விளக்குவல்: திரிகால ஞானமுடையாரை அது கொண்டே ஞானி யென்னல் கூடுமோ என்பது விடயம். சிவஞானங் கொண்டு பார்த்தால் திரிகால ஞானமட்டுமல்ல, பதிஞானமு முண்டாம். இப்பதி ஞானத்தால் பார்ப்போர்க்கு உலகம் தோன்றாது. வெளியே பன்னிரண்டங்குலம் ஓடும் வாயுவை ஆறங்குலத்தி லடக்கும்போது, திரிகால ஞானமுதிக்கும். அந்நிலையிலும் ஆன்ம தரிசனம் வாய்ப்பதில்லை. மனம் பக்குவப்பட்டு நிற்பதே கிட்டிய பயன். அது ஆத்ம சக்தி; சிவசத்தியன்று. அது உட்கண்; மன நிரோதத்தில் திறக்கும். அதுவே சிவஞானமன்று, சிவஞானத்திற்கு மிகவும் தாழ்ந்தது. சிவனை விட்ட எந்த ஞானமும் பிரயோஜனப்படாது. உட்கண் திறக்கப் பெற்றொருவன் சிவனதுருவத்தைப் பார்க்கவும் கூடும். எனினும் அதனாலேயே அம்மூர்த்தியின் சிநேக பாத்தியம் கிடைத்து விடாது. அப்பாத்தியத்தைச் சம்பாதிக்க வேண்டும். சிவனடியவன் என்னுந் தன்மைக்கு இந்தத் திரிகால ஞானமுங் குறைந்ததே.

இனிச் சிவனுடைய எட்டு மூர்த்தங்களாவன: ஐந்து பூதங்கள், சூரிய சந்திரர்கள், ஆன்மா என்பன. சித்து, அசித்து, சிதசித்து எல்லா மிவற்றிலுண்டு. அநுக்கிரகார்த்தமாக அவர் கரசரணாதிகளோடு தோன்றியருளுவர். ஆன்மாவில் அவர் அந்தரியாமியாயிருத்தலால் அவரைப் பற்றிப் பிடிக்குமாற்றலில் மனிதர் வேறுபாடுடையரா யுள்ளார்கள். சைவர் சிவனென்னு

மூர்த்தியைச் செவ்வனே பற்றி வழி படக் கடவர். இன்றேல் உயர்கதி வாய்க்காது. பல தெய்வ வழிபாடு வியபிசாரம் போன்றது. வெளிப் பூசைகளினும் உட் பூசைகளே சிறந் தவை.

" யதா சர்ம வதாகாசம்
வேஷ்ட யிஷ்யந்தி மாநவா :
ததா சிவமவிஜ் ஞாய
து: கஸ்யாந்தே பவிஷ்யதி "

என்ற சுவேதாசுவதரச் சுருதியைக் கருதுக.

[இதன் பொருள்: எப்பொழுது மனிதர் கள் ஆகாயத்தைச் சர்மமாக எடுத்துப் போர்த் துக் கொள்வார்களோ, அப்பொழுதுதான் சிவஸேவையின்றித் துக்கமற்ற மோக்ஷத்தை யடைவார்கள்.]

சிவ சேவை இல்வழி எந்த ஞான மும் கீழ்ப்பட்டதே.

சிவனை அறிந்தன்றி மிருத்தியுவைத் தாண்ட வியலாதென்றும் பிரபல சுருதி முழங்கும்: ஆனால், " காண் பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே " என்பதையும் மறக்க விய லாது. காணும் வேட்கைதேவை. பாவி யாயினும் சிவ சப்தத்தால் சைவனாக வேண்டும்.

யானும் அறுமுகச் சிவனை வணங் கும் ஒரு சைவனே. யான் பிரப் பன் வலசைக் காட்டில் நிட்டை கூடியிருந்த காலத்து, ஒரு நாள் விடி யுங்காலம் சுமார் 3 மணி வேளை யில், 'நிட்டையிலிருந் தெழுந்துவிடு' என்னுமொரு சப்தம் எனக்குக் கேட் டது. எழேன் என்று இருந்த விடத் திருந்தேன். 'நீ எழுந்துவிட வேண் டும்' என்றுமுன்னினும் பெருத்ததோர் தொனி உண்டாயது. அதற்கும் யா னசையவில்லை. 'ஏகாதச ருத்திரர் வரு கின்றனர் எழுந்திரு' என்னும் ஆணை பிறந்தது. 'முருகவே ளாணை வரி னல்லது எழுந்திரேன்' என்று எனக் குள் விடையிறுத்தேன். பின்பு 'முரு கனே இக்கட்டளை யிடுபவன்' என்று உணர்த்தப்பட்ட வளவில் வணங்கி எழுந்தேன். இதுபோன்றதோ ருறுதி யோடு நின்றாலன்றி எப் பெரும் பேற் றையும் அடைய இயலாது. ஆதலின் நன்னெறியில் இயன்றமட்டும் உறுதி யோடு நின்மின்கள்.

வெளிப்பூசைகளில் மாகேச்சுரபூசை சிறந்தது. சிவனடியார்க்குத் திரு வமுது செய்விப்பது மாகேச்சுரபூசை. மெய்யடியாரைக் கண்டுபிடித்தலருமை யாதலின், அப்பூசையைப் பொது வாகச் செய்க. இதற்குபகாரமாக வே றொதைச் சேர்க்கினும் சேர்க்க. ஆனால் இதைக் கைவிடற்க.

உட்பூசை செய்யும் வழிகளைப் பற் றிப் பலர் பல கூறுப. விளக்குப்போல் பாவனை செய்யென்பாரும், சூரியனைப் போற் பாவனை செய்யென்பாரும், காதிற் கேட்கு மோசையில் கருத்தை நாட்டுக வென்பாரும் இவைபோல் வேறு பல விளம்புவாருமுளர். ஆனால் இறைவனைக் கரசரணாதி அவயங்க ளோடு தியானிக்க வென்றே யான் கூறுவேன். இரவுபகலாய் இந்நாட்டம் உங்களிடம் பெருகினால் நீங்கள் பரம யோகிகளாவீர்கள். அநவரதமுமுடியா விடினும், உண்ணுமுன் மூன்று வேளை யாவது சிவனைச்சிந்தை செய்மின். நாள் தோறும் விடியற்காலையில் கைகால் சுத்திசெய்து, அரைமணி நேரமேனும் அம்மூர்த்தியை முறைப்படி நினைமின். அதனால் எல்லா நன்மையுமுண்டாம். இவ்விருவகைப் பூசைகளையும் டம் பத்திற்காகச் செய்யன்மின். உள்ளும் புறமும் ஒத்த உண்மை அன்போடு செய்மின். முருகவேள் உங்களெல் லோர்க்கும் தன்னின்னருளை வழங்கு மாக!

# சிவஞானபோத விளக்கம்

[கி. குப்புச்சாமி முதலியார்]

## சிறப்பு இயல்பு:—எட்டாஞ் சூத்திரம்

" ஐம்புலவேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த [விட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே"

இச்சூத்திரம் ஞானத்தினை புணர் கின்ற முறைமையினை உணர்த்து கின்றது. அதாவது, மேற் சூத்திரத் துள் 'இருதிற னறிவுளது இரண்டலா ஆன்மா' என்றதனால், அசத்தின் வழிப்பட்டு, அதனிடத்தே யிருந்து அசத்தினையறிந்து நின்ற விதமும், சத்தின் வழிப்பட்டு அதனிடத்தே யிருந்து சத்தினை யறியும்விதமும், அச் சத்தைத் தரிசிக்கும் உரிமை தனக்கு உண்டென்பதும் அறிந்த ஆன்மாவிற் குச் சாதிப்பதனால் பெறக்கூடிய பய னும், அதற்குச் சிறந்த சாதனமும், அது வரும் விதமும் இவை யென்று உணர்த்துதல் இவ்வெட்டாஞ் சூத் திரத்தின் கருத்தாகும்.

(இ - ள்) தம் முதல்—தனக்கு உள் நின்று இதுவரையும் அறிவித்து வந்த பரம் பொருள், தவத்தினில்—உயி ரானது தான் முன்னே செய்து நின்ற புண்ணிய விசேடத்தால், குருவுமாய்- முன்னர் அந்தர்யாமியாய் இருந்தது போல் இல்லாது இப்போது குருவடி வங்கொண்டு எழுந்தருளி வந்து சிவ தீக்ஷைசெய்து, ஐம்புல வேடரின்— அரசகுமாரனாகிய நீ ஐம்பொறிகளா கிய வேடரோடு சேர்ந்து, வளர்ந்து— அவர்களோடுவளர்ந்து, அயர்ந்தனை— அரசன் மகனென்ற பெருந்தகைமை யை யறியாமல் மயங்கித் துன்புற்றாய், என-உணர்த்த என்று உணர்த்த, (அப் பெருந்தகைமை யறிந்து), விட்டு—அவ் வளவிலேயே விட்டு நீங்கி, அன்னிய மின்மையின்—அன்னியப் பொருளாக இல்லாது அன்னியம் இல்லாத் தன் மையில் நிலைத்து, அரன்கழல் செலும்- அம்முதல்வனது திருவடிகளை யணை யும். (எ - று.)

அதாவது, உயிர் ஒன்று பக்குவப் பட்ட காலத்து, உயிருக்குயிராய் உள் நின்ற இறைவன் எல்லாவற்றையும் உள் நின்றே அறிவித்ததுபோல் நில் லாமல், மானுடச் சட்டை தாங்கி மானைக் காட்டி மானைப் பற்றுவது போல், குருவாய் எழுந்தருளி வந்து "மகனே! நீ சத்துப் பொருளாவாய்! அவ்விதமிருந்தும், சார்ந்ததன்வண்ண மாகும் உன் தன்மையால், அசத் தொடு சார்ந்து அசத்தாய் நிற்கின்றாய். நீ அசத்தல்லை; இனி என்னோடு சாரு தல் கூடும்" என்று உணர்த்துவான், உவமை முகத்தால் விளக்கவேண்டி, "நீ மன்னவ குமாரன். வேடருடன் வளர்ந்தாய்; அவர்களால் அடையும் துன்பங்களை யடைந்தாய். இனி என் போன்று, நீயும் இருத்தல்கூடும்" என்று அறிவித்தவுடன், அவ்வேட ரின் கட்டினைவிட்டு, தந்தையாகிய அர சரிடத்து அடைவதுபோல், உயிரும் பாசத்தைவிட்டு வேறொரு பற்றுமில் லாது பதியை யடையும் என்பதாம்.

இங்கு இறைவனை மன்னவனாக உவ மித்தது எதற்கு எனின், அரசர்க் குரிய சிறப்படையாளம் வெண்கொற் றக்குடையும், நவமணி முடியும், சிங்

187160

காதனமுமாகும். அதுபோல, பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகும் இயற்கையையுடைய ஒருபெரிய வெண்கொற்றக்குடையும், எல்லாவற்றையும் முழுவதும் ஓர் இயல்பால் அறிந்து கொள்ளும் பேரறிவென்னும் ஒரு பெரிய சுடர் முடியும், அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று எல்லாவற்றையுஞ் செலுத்து மியல்பாகிய ஒரு பெருஞ் சிங்காதனமும் வேறொருவருக்கும் இல்லாமல் தனக்கே உரிமையாகக் கொண்டவனாதலால்.

ஆன்மாவை மன்னவ குமாரனாக உவமித்தது அவ்வித தகுதியுடைய ஆண்டவனது பேரானந்தப் பெருஞ் செல்வ முழுவதும் தன்னுடையதாகக் கொண்டு அநுபவிக்கும் சுதந்திரம் உடைமையாலும், அவனைப் போல் சித்து எனப்படும் சாதியொருமையாலும் ஆகும். இனி ஐம்புலன்களை வேடரென உவமித்தது, மக்கள் பொருள்களை, வழிகளில் செல்லுங் காலத்துப் பறிக்கும் வேடுவர்போல், ஆன்மாவினது அறிவுப் பெருஞ் செல்வம் முழுவதையும் நல்வழிச் செல்லுங்காலத்துச் செல்ல வொட்டாது தொலைத்து, இழிதொழிலில் நிற்கும்படி செய்தலாலுமாம்.

இனி, முன்னர் ஞானத்தினை யுணரும் முறைமையினை யுணர்த்துவது என்று கூறினீர்? எவ்விதம் உயிர் ஞானத்தை யடையும்? இப்பிறப்பில் செய்த ஒரு செயலாலோ என்னும் ஐயத்தை நீக்கும் வண்ணம் இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தாலேயே ஞானம் நிகழுமென்கின்றனர். ஞானமெற்றுக்கு? சரியை முதலியவை போதாவோ என்பார்க்கு, சரியை, கிரியை, யோகங்களைச் செய்தவர்களுக்கு எந்நெறியினும் மேற்பட்டதாகிய நன்னெறியாகிய ஞானத்தை ஆன்மாவுக்கு ஆண்டவன் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடுப்பதற்கு இல்லையென்றனர். இதனானன்றோ, "தவமும் தவமுடையார்க் காகும் அவம், அதனை அஃதிலார் மேற்கொள்வது" என்றான் பொதுவன். இதனை யிவ்வாசிரியர்,

"தவஞ்செய் தாரொன்றும்
தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா
ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து
ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார்சூழ் சொல்லு
மாங்கண்டு"

என்று அருளினர்.

(இ-ள்) சரியை முதலிய தவத்தைச் செய்தவர்கள் அந்த அந்தத் தவத்திற்குரிய பயன்களையுண்டாக்கும் சாலோகம் முதலியபதவிகளையடைந்து அப்பதவிகளில் உள்ளனவாகிய இன்பங்களை யனுபவித்து, முன் உடம்பு இறக்கின்ற காலத்து அடுத்தவினை காட்டும் கதி நிமித்தம்பற்றித் தோன்றிய ஆசையினை மறுபடியும் இந்நிலவுலகத்துப்பிறந்து அநுபவித்து நீக்கிக்கொள்ளுதல்பொருட்டு, மேலும் தவஞ்செய்தற்குரிய உயர் குலத்தினிடத்தே வந்து பிறந்து முன் செய்த தவக்குறையால் பொருள்களிலுள்ள பற்றானதுசூழ்ந்து தன்னைத்துன்புறுத்தாதவிதம் பற்றையறுத்துத் தத்துவ ஞானத்தை யடைதலை வீட்டு நூல்களைக் கற்றவரது சூழ்ச்சி அவ்வீட்டு நூல் கருத்தை உணர்ந்து சொல்லும் என்றனர் என்பதாம்.

மேலும் இவ்வெண்பாவில் நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணு



தல் என்ற அருத்தாபத்தி நியாயத்தால் இழிகுலத்தோர் தத்துவஞானத்திற்கு உரியரல்லரென்பது பெறப்பட்டதாகும். இது கருதியே வழிநூலாரும், "தரையினில் கீழைவிட்டுத் தவஞ் செய்சாதியிற் பிறந்து" என்றனர். அன்றியும், ஒருவனுக்கு உடம்பு இறக்குங்காலத்து, அடுத்த வினை காட்டும் கதிநிமித்தம் பற்றி அவா எழும் என்பதைப் "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும், செம்பொருள் காண்ப தறிவு" என்னுந் திருக்குறளின் உரையில், பரிமேலழகன், "உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது, அதுவாய்த் தோன்றுமென்பது எல்லாவாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற் கேதுவாய பாவனை கெடுதற் பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்க வுபாயமில்லையென்பதறிக" என்று கூறியதும் காண்க.

இவ்விதம் உணர்த்திய ஆசிரியர், எற்றுக்கு ஞானத்தை யடைதல் வேண்டும், வேள்வி யொன்றே போதாதோ? என்பார்க்கு ஐயத்தினை நீக்கும் வண்ணம்,

"பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பிற வத்தான்
மருவுவனா ஞானத்தை வந்து"

என்று அருளினர்.

(இ-ள்) ஒரு நல்வினையைச் செய்யத் தொடங்கி அதற்குரிய அறநூலை ஆராய்வாரது அறிவின் கண் அவ்வறிவு விடயமாய் வருங்காலத்தே வரக்கூடிய காமியப் பயன்களை அதனோடேயே சொல்லிக் கொண்டு வருகின்றவாய வேள்வி முதலிய தருமங்களின் பயனாகிய இன்பம் முன்னே ஒரு முறை பசித்து உண்டும், உண்டவுடன் பசிக்கின்ற அவனுக்கு உண்ட உணவால் வரும் இன்பமும் எவ்வளவோ, அவ்வளவேயாகுமாதலால், ஒருவனுக்கு உண்டாகும் ஞானத்தைத் தடுத்து பந்தத்தைச் செய்கின்ற வழி பொன் விலங்கும், இரும்பு விலங்கும் போல தம்முள் சமமாகி, அறியப்படுவனவாகிய அறம் பாவம் என்னு மிரண்டும், சரியை முதலாகிய தவங்களால் துலைபோன்று நேராக வொத்து நிற்கும் இருவினை யொப்பு வருமாயின் அத்தவமுதிர்ச்சி யுடைமையான், மேலே சொல்லிய ஞானத்தை யுணர்த்தும் ஞான குருவைத் தேடிவந்து ஞானத்தைத் தலைப்படுவன் என்பதாம்.

இச்செய்யுளின் கருத்து, வேள்விமுதலாயினவாய அறங்களெல்லாம் அழிதல் தன்மையதாய காமியப் பயன்களைப் பயப்பனவே யன்றி தத்துவ ஞானங்களைப் பயவா என்றும், அவ்வளவோடு பயவாவிடினும், தீவினை செய்தான் ஒருவனுக்கு நல்வினை செய்யாது நிற்பதற்குத் தடுப்பதுபோல், ஞானத்தை யடையவொட்டாது தடுக்குமென்றும் அறிந்ததாயிற்று.

இனி, எற்றுக்கு இறைவனே குருவாய் வருதல் வேண்டும்? மானுடனொருவன் போதாதோ வென்பார்க்குப் பதில் கூறுவார் போன்று, "இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவாய் நின்று உணர்த்தும்" என்றது. ஏனெனில் மேற்சொல்லிய சரியை, கிரியை, யோகமாகிய மூன்றும் முடிந்த பிறகு அம்முடிவினிடத்தே, மல பரிபாகம், சத்திநிபாதம்

அடைந்த உயிர்கட்குத் தத்துவ ஞானத்தை அவாவுதல் இயல்பாதலால், அவ்வவாவினை யுடைய உயிர்களுக்கு உள்நின்று உணர்த்துகின்ற பரம்பொருளே, பக்குவமறிந்து அத்தத்துவ ஞானத்தை அறிவுறுத்தும். ஏனையவர்க்கு அது கூடாது என்றனர். ஏனெனின், அவன் உயிர்க்கு அன்னியமாய் நில்லாது பாலில் நீர்போல் மறைந்து நில்லாது, தயிரில் நெய்போல் விளங்கி நிற்பதால் சைதன்ய சொரூபியாய் நிற்கும் என்றனர். அவ்விதம் உணர்த்துவான் எங்கு நின்று உணர்த்துவான்? அவன் உணர்த்தாமலே ஞானத்தை யடைபவரும் இன்றே? என்பார்க்குப் பதில் கூறுவார் போன்று,

" மெய்ஞ் ஞானந் தானே
விளையும் விஞ்ஞான கலர்க்
கஞ்ஞான வச்ச கலர்க்கக்
குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப்
பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்
குருவாய் முன் "

என்று அருளிச் செய்தனர்.

(இ-ள்) அவ்விதம் தயிரில் நெய்போல் பக்குவ ஆன்மாக்களுக்கு விளங்கி நிற்கும் முதல்வன் மூன்று விதமாகிய ஆன்மாக்களுக்குள் ஒரு மலமுடைய விஞ்ஞான கலர் என்பார்க்கு உள் நின்றே தத்துவ ஞானத்தை விளைவிப்பனென்றும், இருமலமுடைய பிரளயாகலர்க்கு நான்கு தோள், மூன்று கண், நீல கண்ட முதலிய உறுப்பினை யுடையதாய் முத்தொழிலும் ,நடத்துகின்ற தனது இயற்கை வடிவையே குருவாகக்காட்டி எதிரில் நின்று, தத்துவ ஞானத்தை யுபதேசித்து உணர்த்துவனென்றும், மும்மல முடைய சகலர்க்கு அவர்வடிவு போன்ற மானுடச் சட்டை தாங்கி அவர்க்குப் பின்னாக மறைந்து நின்று தத்துவ ஞானத்தை யுணர்த்துவான் என்றும், அவ்வேறுபாட்டினை யறிவாயாக என்பதாம். இவ்விதம் கூறிய ஆசிரியர் ஆன்மாக்கள் மூவர்க்கும் ஓர் இயற்கையாக உணர்த்தாது, ஒருவர்க்குத் தன்மையினும், ஒருவர்க்கு முன்னிலையினும், ஒருவர்க்குப் பின்னிலையினுமாய் நின்று உணர்த்துவது எற்றுக்கு? என்பார்க்குக் காரணம் கூறுவார் போன்று,

" அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்
[தின் வீடென்
குறைவில் சகன்சூழ் கொள்பவர்க்கு "

என்று அருளிச் செய்தனர்.

(இ-ள்) உயிர்களெல்லாம் தமக்கு உரிய படி வழியின்வைத்து, முதல்வன் அறிவிக்க அறியும் இயற்கை உடையனவே அல்லாமல் ஒன்றுபோல் அறிவிக்க அறியும் இயல்பின அல்ல ; ஆதலால், அவ்வறிவால் குறைபாடு இல்லாத சகக்கடவுளது, உபதேச மொழியைக் கொண்டு உணரும் இயல்பினராய பிரளயாகலர், சகலர்க்கு அவ்வறிவித்தலால் அறிதலாகிய குறைகள்முன்னிலையினும், பின்னிலையினும் நிகழ்வனவாம். உபதேசமொழி கொண்டு உணர வேண்டாத விஞ்ஞான கலர்க்கு முதல்வனால் கொள்ளப்பட்டதன் உண்மை மாத்திரையில் வீடு பயக்கும் உணர்வு உண்டு என்று அறிவாயாக என்பதாம்.

அவ்விதங் கூறுதலும், அம்மூவித ஆன்மாக்களுள், சகலர்க்கு உணர்த்தும்



ஞானம் உபசாரமேயல்லது, மற்றை இருவர்களுக்கு உள்ளதுபோல் உண்மையாகா என்பாரை நோக்கி, அவ்வுபதேசம் உண்மையாதல் உவமை முகத்தால் வலியுறுத்துவார்.

" இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்தி
[ழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றானையா ரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று "

என்று அருளினார்.

(இ-ள்) அறிவால் நன்மையுடைய மாணாக்கனே! திருந்திய ஆபரணங்களை யணிந்த பெண்ணொருத்திக்குத் தன் குழந்தையினிடத்துள்ள அருவாகிய அன்பினைப் பிறரறியும் வண்ணம் வெளிப்படுத்தும் அவ்வன்பின் உருவாகிய முலைப்பாலும், கண்ணீரும் அவளிடத்து, குழந்தையைப் பார்ப்பதற்கு முன் இல்லாதனவா யிருந்து, பின் உண்டாவன வாகும். அதுபோல, நீரினிடத்தேயுள்ள நிழல்போல் உயிர்களிடத்துக் காணப்படுத லில்லாது அருவமாய் நின்ற முதல்வன் அவனே குரு வடிவமாய் வந்து தோன்றி முன்னின்று உணர்த்தானாயின் யாவர்தாம் அறிதல் கூடும் என்பதாம். இது கேட்ட வாதியொருவன், உலகப் பொருள்களை விளக்கும் ஐம்பொறிகளே தத்துவ ஞானத்தையும் விளக்குவது கூடும். இதற்கு இறைவன் குருவாக வருதல் வேண்டா என்னலும் அதுகேட்ட ஆசிரியர், உயிரின் தன்மை இதுவென்று முன்னரே உணர்ந்தாய். சார்ந்ததன் வண்ணமாகிய உயிர் பளிங்குபோல் உள்ளது. பளிங்கில் சேர்ந்த நிறம் எதுவோ, அந்நிறத்தையே பளிங்கு தன்னிறம்போல் காட்டுவது வழக்கமாதலால் இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளால் மயங்கித் தம்மை உணரா என்பதை யறிவித்தற்கும், சிவ சத்து தன்மாட்டு விளங்கும் என்பதற்குமே,

" பன்னிறங் காட்டும்
படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந்
தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து
பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம்
வேறு."

என்று அருளினார்.

(இ-ள்) தன்னால் சாரப்பட்ட பல நிறங்களின் இயல்பையே தன்னிடத்துக் காட்டி நிற்கும் பொது இயல்பினையுடைய படிகம்போல தன்னால் சாரப்பட்ட இந்திரியங்களின் இயல்பினையே சார்ந்ததன்வண்ணமாய்த்தன்னிடத்து விளக்கிக்காட்டும் தன்னுடைய பொது இயல்பை முன்னர்ச் சிந்தித்து அறிந்து கொண்டு பின்பு அந்நிறங்கள் படிகத்துக்கு வேறு என்று அறியுந்தன்மை போல, பலவகை இயல்புடைய பொது இயல்பைச் செய்யும் பொறிகளைத் தன்னின் வேறு எனத் தெளிந்து, அவற்றாகிய அப்பொது இயல்பு பொய்யாய் ஒழியும் வண்ணம் தன்னுடைய சிறப்பியல்பை உணர்ந்தானாயின், அவ்வசத்தாகிய பொறிகளுக்கு வேறாகிய சிவ சத்தினது இயல்பு தன்மாட்டு விளங்கச் செய்யுமாகலின் அச்சிவ சத்துக்கு அடிமையாம் என்பதாம். அது கேட்ட வாதியொருவன், புலன்களின் தன்மையை வேறாக உணர்ந்து அவற்றைப் பொய்யெனஎண்ணி, மெய்கண்டார்க்கு அதுவே அமையும் ; கருவிகள் நீங்கிய இடத்து முயற்சி கூடாமையின் தைவமாதல் பெறப்படாது என்று கூறலும், ஊசலுடைய கயிறு அறுமாயின், அவ் ஊசல் தங்குவதற்கு இடம் தரையாக

இருப்பது போல், இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே முதல்வனது சீபாதத்தையே அணையும் என்பார்,

" சிறைசெய்ய நின்ற
செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்
விற்றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு
மாறுபோன் மீளா
துலைவி லரன்
பாதத்தை யுற்று "

என்று அருளினர்.

(இ - ள்) ஒருவன் அணையை உயர்த்திக்கட்டித் தடைசெய்ய அங்கு தடையுண்டு தேங்கி நின்ற ஆற்று நீர்போலக் கருவிகளாலாய பாசஞானம் தன்னுடைய வியாபகத்தைத் தடுக்க அதனிடத்து ஏகதேசமாய் அடங்கித் தடைப்பட்டு நின்ற உயிர், அவ்வணையுறிந்து தடை நீக்கிக் கடலினிடத்தே விரைந்து சென்று அக்கடல் நீரேயாய் அக்கடலுள் அடங்கித் திரும்பிவாராத ஆற்று நீரைப்போலக், கருவிகளாலாகிய பாச ஞானத் தடையைவிட்டு நீங்கியவிடத்து, நித்தியமாகிய சிவபிரானது திருவடியைத் தலைக்கூடி அத்திருவடி நிறைவேயாய் அதனிடத்தே யடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது என்பதாம். இது கேட்ட வாதி யொருவன், எல்லாம் சிவமாகக் கண்டார்க்கு மீண்டாலென்னை? மீளாவிடில் என்னை? ஏன் மீளாது என்று சொல்லுதல் வேண்டும்? என்னலும், மீளாமையை வலியுறுத்துவதற்கு,

" எவ்வுருவுந் தானென்னி
லெய்துவா ரில்லைதா
னிவ்வுருவின் வேறே
யிறையல்ல—னெவ்வுருவுங்
கண்போ லவயவங்கள்
காணவக் கண்ணில்லார்
கண்பேறே காணக்
கழல் "

என்று அருளினர்.

(இ - ள்) உயிரினது உணர்வேயல்லாமல் புலனுணர்வும் சிவமேயாகுமாயின், விசேட மில்லாமையால் புலன்வழி யொழுகும் சகல நிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக் கூட வேண்டாமையால் ஒருவரும் அதனை யடைவா ரில்லையாய் முடிந்து போலியாய் முடியும். அதுபற்றி முதல்வன் புலனுணர்வோடு இயைபில்லாமல் அதனின் வேருய் நிற்பன் என்னில், அப்புலனுணர்வுக்கு அவனுல் ஆகவேண்டுவது ஒன்று மில்லாமையால் அவன் அதனிடத்து இறைவனல்லன் எனக் கூறப்பட்டு முதன்மைக்கு இழுக்காய் முடியும். மற்று எதுதான் அதன் இயைபு என்னில், உயிருணர்வுபோல புலனுணர்வும் கலப்பினுல் சிவமேயாமாயினும், இரண்டுந் தம்முள் ஒப்புடைமையன அல்ல! உயிர் ஐம்பொறிகளினும் ஒப்பநிற்பினும் அவற்றுள் மெய் வாய் செவி மூக்கு நான்கும் கண்ணிந்திரியம் ஒளியால் அவ்வான்ம போதத்தோடு கலந்து, தூரத்திலுள்ள விஷயத்தையும் வியாபித்து அறிவது போல, வியாபித்து அறியமாட்டாதனவாய்த் தம்மிடத்து வந்த விடயங்களையிருந்தாங்கு இருந்து, அவைகளோடு பொருந்தி யறியுந்தன்மையவே யாகும். அக்கண்ணினது வெற்றிப் பாட்டினைக் கண்ணொளி யிழந்தாரது கண் பேற்றைக் கண்டு அறிவாயாக என்பதாம். அரன்பாதத்தை யடைந்த உயிர் ஓரிடத்து மீட்சியும் உண்டு என்பார்க்குப் பதில் கூறுவார் போன்று,

" ஐம்பொறியி னல்லை
யெனுமந்த தாசிவனை
யைம்பொறியை விட்டங்கனை
சகல—னைம்பொறியி
னீங்கா னீர்ப்பாசி
போ னீங்கு மலகன்மம்வரி
னீங்கானை நீங்கு
நினைந்து "

என்று அருளினர்.

(இ - ள்) ஐம்பொறிகள்போல ஏகதேச விளக்கம் உடையா யல்லை என்று அறிவுறுக்கப்படும் சித்தாந்த மகா வாக்கியத்தைப் பெற்றுடைய மாணவகனே! சிறைவிட்டு அலைகடலில் சென்றடங்கு மாறுபோல் என மேற் கூறிய விதமே, ஐம்பொறிகளா லாகிய புலனுணர்வில் நீங்கிச் சிவன் திருவடியை யடைந்த சகலன் அவ்வைம் பொறிகளால் மீண்டும் அத்திருவடியை விட்டு நீங்குவா னல்லன், கல்லெறியும் வழி நீங்கிய நீர்ப்பாசி, அக் கல்லெறி நீங்கிய வழி பரந்து செல்லுவதுபோல, அவ்வணைதலின் கண், நீங்கிய மலகன்ம மாயைகள் வாதனை வயத்தால் நிகழும் அயர்ச்சிபற்றி வந்து கூடுமாயின் அதுபற்றிப் பொறி வழி மீளாமல் அவ்வழியும் தன்னை விட்டு நீங்காத முதல்வனை இனிக் கூறப் படும் உபாயங்களில் நின்று சிந்தித்து அவற்றை நீக்கிக்கொள்ளும் என்பதாம்.

இச்சூத்திரத்தால் உத்தம முடைய ஆன்மாக்களுக்கு இறைவன் மானுடச் சட்டை தாங்கிவந்து குருவாய் நின்று புலன்களின் வழி மயங்கிநின்ற தன்மையினையும், ஆன்மா சித்துப்பொருள் என்பதையும் உணர்த்துவானென்றும், அவ்விதம் உணர்த்திய வழி அவ்வுயிர் ஆண்டவன் திருவடியை அணையும் என்றும் கூறியதாம்.

**எட்டாஞ் சூத்திரம் முடிவுற்றது**

---

# முருகன் நுண்மாண்

[தி. கு. கி. நாராயணசாமி]

(உரிமையுடையது)

## வேல்

" ஆடும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்!

'கொன்றையார்க்கு பரசொடு கடிய
சூலம் பிநைகவில் படைகள்;
மாலுக்கு சிலை ஆழி சங்கு வாள் கதை
படையைந்தாகும்; அறுமுகன் உறு
படைவேல்' என்று நிகண்டு உரைத்தவிடத்து முருகனுக்கு ஓரே படை வரைந்த தனிப்பெரும் பெருமை ஆய்வாம். வேல் - செந்தமிழ்ச் சொல். வேலில் வெல் குறுகி ஒலித்தலின் வெல்வது வேல். படையின் காரியமாகிய வெற்றியை வேல் அகத்தமைத்து ஒலித்தலால் இது காரகப்படை போலும்! பரமன் வேல் அருளிய அமயத்தைக் கந்தம்,

" ஆயதற் பின்னரேவின் மூதண்டத்தைம்
பெரும் பூதமு மடுவே
தேயபல்லுயிரு மொருதலை முடிப்ப
தேவர்மேல் விடுக்கினு மவர்தம்

மாயிருந் திறலும் வரங்களுஞ்சிந்தி
மன்னுயி ருண்ப தேப்படைக்கு
நாயக மாவதோரு தனிச்சுடர்
வேனல்கியே மதலைகை கோடுத்தான்"
(உற்ப. படையெழு. 38)

என்றும் 'அரன்பாற் படை யரசை வாங்கினுன்' எனப் பாம்பன் சுவாமிகள் குமார சுவாமியமும், 'குகன் கையில் தோற்றும் வெற்றி வேலாயுதத்திற்கு மேலாயுத மென்ன வேறில்லையே; பன்னிரு கைக் குகவேள் பூண்ட சத்திப் படைத் தெய்வமே' எனத் தண்டபாணி சுவாமிகள் வேல் அலங்காரமும் ஒத்து ஒலித்தல் காண்க.

வேல்-அயில்-சத்தி-எஃகம்-ஞாங்கர்-உடம்பிடி ஒரு பொருள் தரும் பலவரிகள். இவற்றுள் வேலும் எஃகமும் ஆயுதப் பொதுப் பெயராகும். பழம் - பொதுப் பெயராயினும் வழக்கில் சிறப்பாக வாழைப் பழத்தைக் குறித்தல்போல வேலென்ற ஆயுதப்பொதுப் பெயர் சிறப்பாக முருகன் படையை உணர்த்திற்று. இதனைப் புலவர் புராணத்தார் 'வேலென்ற பேரொன்றை யாயுதமியாவும் விளங்கு பொதுப்பாலென்று அணியினும் உள்ளன' எனச் சிறப்பித்தலும் சிந்திக்க உரியன. படைக்கலம் எப்பொழுதும் கூர்மையாயிருத்தல் வேண்டும். அக்கூர்மை இதனிடம் சிறத்தலின் கூர்மை தெரிக்கும் அயில் வேலுக்குப் பெயராயிற்று.

வெல்வது வேல் எனில் அக்கருவியேயோ வெல்வது? அல்ல. பின் யாது? வீரன் ஏறிய பரியா? கையிற் பிடித்த கலமா? நின்ற நிலமா? உடுத்த உடையா? அன்று; அன்று. பின் என்னை? இவையன்ன துணையுடையவன் பகைவர் தம் படைவலி கண்டு எங்ஙனம் வெல்வதென ஆய்ந்து முடிவு கட்டும் ஞானமாகும். ஞானம் - அறிவு வெல்லும்; பிறதுணைபுரியும். வேலுக்கு வடமொழி சத்தி. 'சத்திதான் தடையிலா ஞான'மென்பது சித்தி. இவற்றால் வேல், சத்தி, ஞானம், அறிவு ஒருபடித்தாதல் காண்க. இச்சத்திவிழைவு (இச்சை), செயல் (கிரியை), அறிவு (ஞானம்) என முத்திறப்படும். இவற்றில் அறிவே, ஞானமே, சத்தியாக, வேலாக செங்கையிலுள்ளது. இவ்விறையறிவு மாயையினை நிவர்த்தித்து மருளைப் போக்கித் தலைவனை அணுக அருளை அருளும். 'ஞானங் கொண்டே நணுகும் சிவபதம்' என்ற சிவப்பிரகாசர் செம்மொழியும் ஈண்டு நோக்க.

இவ்வேல் அடியவரை அணுகுங்கால் அறக்கருணை வடிவும் அடியவர் பகைவரை அணுகுங்கால் மறக்கருணை வடிவும் ஏற்று மாயை அகற்றும் தன்மையது.

"ஏயென முருகன் ஜெட்ட
விருதலை படைத்த ஞாங்க
ராயிர கோடி யென்னு
மருக்கரிற் றிகழ்ந்து தோன்றித்
தீயழற் சிகழி கான்று
சென்றிட வவுணன் கொண்ட
மாயிரு ளுருவ முற்றும்
வல்விரைந் தகன்ற தன்றே." 465

"விடம்பிடித் தமலன் செங்கண்
வெங்கன லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற்
ஜேய்த்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வ மிவ்வா
றுருகெழு செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர்
மாமுத றடிந்த தன்றே." 487

"புங்கவர் வழுத்திச் சிந்தும்
பூமழை யிடையி னேகி
யங்கியின் வடிவ நீங்கி
யருளுருக் கொண்டு வான்றோய்



கங்கையிற் படிந்து மீண்டு
கடவுள ரிடுக்கண் டீர்த்த
வெங்கடம் பெருமான் செங்கை
யெய்தி வீற்றிருந்த தவ்வேல்." 491
—யுத்த - சூரபன்மன் வதை.

'திருவருட் சத்தி வடிவான வேற்படை, எண்ணில் வேதாகமங்கள் பகர்ந்த தெய்வத் துருவ மெல்லாமதுதானு விளங்கிடு முண்மையதே' என்றது வேல் அலங்கார அலங்கரிப்பு. வேல் இறைவனது ஞானமாதலால் கச்சியப்பர் தெய்வப் படைக்கலமென மேல்காட்டிய 487 செய்யுளிலும் பிறவிடத்தும் சிர்தூக்கினுர்.

"தேயுவி னெடுத்த வண்டத்
திறங்களும் பிறங்கு ஞாலத்
தாயிர கோடி யண்டத்
தங்கிய மொன்றிற் றென்ன
மீயுயர்ந் தொழுகி யான்றோர்
வெருவருந் தோற்றங் கொண்டு
நாயகன் றனது தெய்வப்
படைக்கல நடந்த தன்றே."
—யுத்த - சூரபன்மன்—481.

வேல் பெறுதல் உணர்ச்சி பெறுதல் என்ற பொருளில் சீவக சிந்தாமணியில் வருதல் வருமாறு:—

"வீழ்ந்து மயில்போல்
விசயை கிடந்தானைத்
தாழ்ந்து பலதட்பந்
தாஞ்செய்ய வேல்பேற்று
போழ்ந்தகன்ற கண்ணுன்
புலம்பா வெழுந்திருப்பச்
சூழ்ந்தொழு திறைஞ்சிச்
சொன்னுரவன் றிறமே."
கனகமாலை—254.

விசயை மயில்போல வீழ்ந்து கிடந்தவளைத் தாழ்ந்து பல குளிர்ச்சிகளைச் செய்ய உணர்ச்சி பெற்று அரசனுயிரைப் போழ்ந்தகன்ற கண்ணுளெழுந்திருப்ப, கைகுவித்து வணங்கிச் சூழ்ந்து அவன் பிழைத்தபடி கூறினுரென்க என்றது புலவர் நச்சும் நச்சினுர்க்கினியர் உரை.

'முருகப் பெருமான் தனது இருதுணைவியரோடும் வேலுடனும் மயில் மீதே வதியுங்காலை அப்பெருமானைக் கடவுளாகவும், வேலினையும் இருதுணைவியரையும் முறையே அறிவு விழைவு செயலென்னும் மூவகை யாற்றல்களாகவும், மயிலினை அவன் திருவடிக் கீழிருந்து தனது அறிவு விழைவு செயல்களின் வழி நிற்கப்பெற்றுப் பேரின்பம் நுகரும் வீடெய்திய உயிராகவுங் கருதுவதே சமயநூலார் கொள்கையாம். உயிரினது அறிவின் கண் இறைவனது அருள்மன்னுதலின், அறிவுக் கறிவாய் நிற்கும் அவனது அறிவாற்றலைத் தமக்கு நினைவூட்டுவார் 'வேலுமயிலுந் துணை' யென்னுஞ் சொற்றொடரை வாய்ப்பாடாக வழங்குவாராயினர். வேலென்பது இறைவனது அறிவையும் மயிலென்பது அவ்வறிவுக்கு உட்பட்ட உயிரினறிவையுங் குறிக்கும்' எனத் திருவாளர் கா. சுப்பிரமண்யம் பிள்ளை அவர்கள் 'வேலுமயிலும் துணை' எனும் சொல் அடுக்கை மக்கள் [illegible] துன்பில் பதம்பெற வழக்கில் அடிபட்டதையும் மிகப் பொருத்தமாக விளக்கியிருக்கிறுர்.

'முத்தி நல்குங் குகவேள் செங்கை வேலை உன்னுதலே-மாலின்றிய மனத்தோராயிடினும் வயங்குகதிர் வேலின்றிக் கந்தனைப் பூசை செய்தாற் பயன் வீண்படுமே-வேற்படையைப் பேணிப் பரவும் பெரியார்க்குப் பின்னைப் பிறப்பில்லையே' என ஆமாத்தூரார் அருளியதின் திட்ப நுட்பம் யாது? ஞானம் - அறிவு இன்றி இறைவனை வழிபடுதல்

உயிர் அற்ற உடலை ஒக்கும் என்பதே. மற்றும் அறிவு விளக்கமே பண்டை நாளில் மக்களுக்குத் தலையாய குறிக்கோளாக இருந்தமைக்கு வேல் பூசனையே சிறந்த எடுத்துக்காட்டாகும். 'ஞானந்தான் உருவாகிய நாயகன்' என்ற கந்தத்தின் கலிப்பும், 'பழநிப் பதியிற்றிரு ஞான பூரணசத்தி தரித்தருள் பெருமாளே' என்ற அருணகிரி அருள் வாக்கும் சிந்திக்கும்போது முருகனுக்கும் வேலுக்கும் வேறுபாடின்மையைக் காண்க. இது குறித்தே தமிழர் வேலை வணங்குவதைத் தமக்கு வேலையாகக் கொண்டனர் போலும்!

"தோகைமே லுலவுங் கந்தன்
சுடர்க்கரத்தி லிருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவ தெமக்கு வேலை"

—சைவ எல்லப்பர் (செவ்வந்தி)

இனி அமயம் நேர்ந்துழி வேல் ஆற்றிய வேலையின் நுட்பத்தை நுவலும் கட்டுரை எழுத எண்ணி இம்மட்டோடு விரிவஞ்சி முடிப்பாம்.

"கோழிக் கொடியை நின்வேலை மயிலைக்
[குறித்தவரை
யூழிக் கனலும் அணுகாது."

—சிதம்பர சுவாமிகள்.

---

# ஒரு வேண்டுகோள்

## [பத்திராசிரியர்]

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை, 10-11-1931.

அன்பு மிக்க ஐயா,

நலன். தங்கள் நலன் அறிய அவா.

தங்களுக்கு மாதந்தோறும் தவறாமல் "சித்தாந்தம்" பத்திரிகை வந்து கொண்டிருக்குமென்று நம்புகிறேன். இந்த நான்கு ஆண்டுகளாக சமாஜம் செய்து வரும் பெருந்தொண்டுகளும் அரும்பணிகளும் இன்னின்னவென்று மேற்படி பத்திரிகையின் மூலம் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள். சில ஆண்டுகட்குமுன்னர் சென்னைச் சைவ பரிபாலன சபை "திருவாசகம்" 2 அணா பதிப்பில் 20,000 பிரதிகள் வரை வெளியிட்டுப் பணியியற்றியது. அந்நன்முறையைப் பின்பற்றித் தேவாரத் திருமுறைகளையும் இரண்டு ஆண்டுகளுக்குள் நம் சமாஜம் பல்லாயிரப் பிரதிகளாக வெளியிட்டுள்ளது தாங்கள் அறிந்த தொன்று. இத்திருமுறைகளை மொத்தமாக வாங்குவோருக்குள் ஒரு புது வகையான ஊக்கத்தை உண்டாக்குவதற்காக ஒரு பரிசுப் போட்டியையும் சமாஜம் ஏற்படுத்தியுள்ளது. அதன் விவரங்களை இவ்விதழின் வெளிப் புறத்தாளில் காண்க. இப்பரிசுப் போட்டியில் தாங்கள் ஒரு சீட்டை யெடுத்துத் தங்கள் சைவப்பற்றைப் பதிவுசெய்துகொள்ள வேண்டியது அவசியம். ஆகையால் தயவு செய்து இன்றைய தினமே அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி உதவிபுரிய வேண்டுகிறேன்.

தாங்கள் அடிக்கடி தலயாத்திரை செய்திருத்தல்கூடும். யாத்திரை செய்யும்போது ஒவ்வொரு தலத்துக்கும்



அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷன் எது, ஸ்டேஷனிலிருந்து கோவிலுக்கு எவ்வளவு தூரம், ஸ்தலத்தில் சாப்பாடு, சத்திரம் முதலிய வசதிகள் உண்டா என்ற விவரங்கள் தெரியாமல் தாங்கள் ஒரு வேளை கஷ்டப்பட்டிருக்கவும் கூடும். அத்தகைய கஷ்டங்கள் இனி நம்தமிழ் மக்களுக்கு நேரா வண்ணம் எல்லாப் பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கும் ஸ்டேஷன், வழி தூரம், சத்திரம், வண்டி வசதிகள் முதலிய எல்லா விவரங்களும் அடங்கிய ஒரு தலயாத்திரைப் படமும் படவிளக்கமும் அடக்கவிலையாக நான்கணாவுக்கு நம் சமாஜம் தருகிறது. தங்களிடமும் தங்கள் நண்பர்களிடமும் ஒவ்வொரு பிரதி யிருத்தல்வேண்டும். சிவஸ்தலங்கள், விஷ்ணு ஸ்தலங்கள், சுப்பிரமணிய ஸ்தலங்கள் ஆக ஏறக்குறைய ஐந்நூறு தலங்களுக்கு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இன்றைக்கே ஐந்து பிரதிகளை வாங்கி உபகரியுங்கள்.

மற்றொரு முக்கியமான விஷயத்தைப்பற்றித் தங்கள் கருத்தை அறிந்துகொள்ள எனக்கு ஆசையுண்டு. இதுவரை சமாஜ அங்கத்தினர் சந்தா ரூபாய் ஒன்றரையாகவே இருக்கிறது. சமாஜ அங்கத்தினர்க்கு "சித்தாந்தம்" பத்திரிகை இலவசமாக அனுப்பப்படுகிறது. இப்போது சமாஜத்தின் பணியும் தொண்டும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன. கடிதப் போக்குவரவும் முன்னிருந்ததைவிட மிக அதிகம். எனவே ஒன்றரை ரூபாய் சந்தாவில் எல்லாவித செலவுகளையும் திட்டம் செய்வது இயலாததா யிருக்கின்றது. மேலும் பத்திரிகையின் நடைமுறை உருவம் முதலியவற்றிலும் சில மாறுதல்கள் இன்றியமையாதனவாக விருக்கின்றன. அவைகளை யெல்லாம் நன்றாய் ஆலோசனைசெய்து சமாஜ நிர்வாக சபையினர் கீழ்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர். அவைகளை சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று மீண்டும் ஆலோசனை செய்து, பத்திரிகையின் மூலம் அங்கத்தவர்கட்கு அறிக்கை செய்து, அவர்கள் கருத்துக்களை நன்றாய்த் தெரிந்துகொண்ட பிறகே முடிவு செய்யவேண்டுமென்று தீர்மானித்தது. ஆகையால் தாங்கள் கீழ்வரும் தீர்மானங்களைப்பற்றிய தங்கள் கருத்துக்களை உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

### தீர்மானங்கள்

(1) "சித்தாந்தம்" பத்திரிகையின் தற்போதுள்ள ராயல் மூன்று பாரம் (24 பக்கம்) அளவைமாற்றி, டபில் கிரவுன் மூன்று பாரம் (48 பக்கம்) அளவில் வெளியிடுதல்.

(2) இதில் இரண்டு பாரத்தை (32 பக்கம்) பத்திரிகைக் கட்டுரை முதலியவற்றிற்கும் ஒரு பாரத்தை (16 பக்கம்) தொடர்ச்சியாக திருவாசகம் உரை (பிறகு வேறு புத்தகங்கள்) வெளியிடுதற்கும் [illegible]

(3) சமாஜத்தின் பணியின் பெருக்கத்தையும், காகித விலையேற்றம், திருவாசகம் உரை வெளியீடல் முதலியவற்றையும் உத்தேசித்துச் சந்தாவை ரூபாய் இரண்டென்று மாற்றுதல்.

இந்தத் தீர்மானங்களால் ஏற்படக்கூடிய சாதகபாதகங்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல எண்ணுகிறேன்.

(1) ராயல் அளவு கிரவுன் அளவைவிட அகல நீளமுள்ளது. பார்வைக்கு நன்றாயுள்ளது. ஆனால் கட்டுரைகளை இரண்டு பத்தியாக (columns) ஒவ்வொரு பக்கத்திலும் அச்சிடவேண்டி

யிருக்கிறது. இவ்வாறு செய்வது படிப்பவர்கட்கு சௌகரியக் குறைவு என்று சிலர் கூறுகின்றனர். மேலும் சட்டைப்பையில் அடங்கும் அளவல்ல. கிரவுன் அளவு தேவார வெளியீட்டின் அளவு. சட்டைப்பையில் அடங்கும். ஒரே பத்தியாக (Single column) வெளியிடலாம். படிப்பதற்கு நிரம்பவும் சௌகரியம். மேலும் 24 பக்கங்கள் இனி 48 பக்கங்களாக அதிகரிக்கின்றன.

(2) ராயல் அளவாக இருந்தால் புத்தக வெளியீட்டுக்கு ஒத்துவராது. கிரவுன் அளவானால் திருவாசகம் உரை முதலிய புத்தகங்களை ஒவ்வொரு பாரமாகத் தனிப்பக்கஎண் கொடுத்து வெளியிட்டு வருவது கூடும். திருவாசகத்துக்கு எளிய நடையில் ஒரு நல்ல உரை தேவையென்பதைத் தாங்கள் ஆர்வத்துடன் ஆமோதிப்பீர்களென்றே எண்ணுகிறேன்.

(3) இவ்வளவு சௌகரியங் கட்கும் அதிகமாகத் தரவேண்டியது அரை ரூபாய்தான். நாட்டின் நிலையை உற்று நோக்கில் இவ்வாறு உயர்த்துவது கூடாது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் நிரம்பிய சைவப்பற்றும் அளப்பரிய ஆர்வமும் மிக்க தாங்கள் சந்தாவில் அரை ரூபாய் உயர்த்துவதைப் பொருட்படுத்த மாட்டீர்களென்றும் அன்புடன் ஏற்றுக் கொள்ளுவீர்களென்றும் எண்ணுகிறேன்.

மேற் கூறியவைகளைப்பற்றித் தங்கள் கருத்துக்களை நாளைய தினமே எனக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். அங்கத்தவர் கருத்துக்களையெல்லாம் தொகுத்து ஆலோசித்து முடிவுசெய்வதற்காக சமாஜப் பொதுக் கூட்டம் ஒன்று 1931ஆம் டிசம்பர்மீ 1௳ கூடும். அக்கூட்டத்தில் நிறைவேறும் தீர்மானங்கள் தங்களுக்கு அடுத்த இதழ் மூலம் தெரிவிக்கப்படும்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள,
ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி,
சைவ சித்தாந்த மகா சமாஜம்.

---

# திருவிசயமங்கை

[வை. சுந்தரேசவாண்டையார்]

(ஆசிரியர், தஞ்சை நாட்டாண்மைக் கழகக் கலைக்கூடம், திருவையாறு)

சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களில் திருவிசய மங்கையும் ஒன்றாகும். இத்தலம் திருப்புறம்பயத்திற்கு மேற்கிலும், திருவைகாவூருக்குக் கிழக்கிலும், மண்ணியாற்றின் வடகரையிலுமுள்ள ஊரிலுள்ள சிவாலயமா? அல்லது கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள கோவந்த புத்தூரிலுள்ள சிவாலயமா? என்பது பலரின் ஐயப்பாடாக உள்ளது. இதனைத் தெளிவுபெற விளக்குவேன்.

கோவந்த புத்தூர் என்பது, புத்தூர் என்னும் ஒருபெயர், காரணம்பற்றிய திருவரிசிற்கரைப் புத்தூர், திருக்கோளிலி புத்தூர் என்பன போன்று, காரணப்பெயராக வழங்குவதாயிற்று. சிவபெருமானை இலிங்க வடிவத்தில் அன்பு பூண்டு ஒரு பசு நாள்தோறும் தனது மடியிலுள்ள பாலைச் சொரிந்து பேறெய்தியால் அச்சிறப்புத் தோன்ற இத்திருப்பதிக்குக் கோவந்த புத்தூர் என்னும் பெயர் வந்தது.



இஃது இன்றும் அவ்வாலயத்தில் உருவக் காட்சியில் வைத்து போற்றப் படுகின்றது. இதனை,

"சீதமு னிசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் னியல்புடைப் புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே"

என்னும், திருஞானசம்பந்த அடிகள் திருப்பாடலால் அறியத்தக்கது. மற்றும் விசயமங்கை என்பது மேலே கூறியவாறு மண்ணியாற்றின் கரையிலுள்ள விசயமங்கை என்னும் ஊரில் உள்ளதா? அல்லது கோவந்த புத்தூரிலுள்ளதா? என்னும் ஐயப்பாட்டினை,

"கொள்ளி டக்கரை கோவந்த புத்தூரில்
வெள்வி டைக்கருள் செய்விச யமங்கை
யுள்ளி டத்துறை கின்ற வுருத்திரன்
கிள்ளி டத்தலை யற்றத யனுக்கே"

என்னும் திருநாவுக்கரசது திருப்பாடலால் கொள்ளிடக் கரையிலுள்ள கோவந்த புத்தூரில் திருவிசயமங்கை உள்ளது என்பதும், அங்கே சிவபெருமான் கோவினுக்கு அருள் சுரந்ததும் தெற்றென விளக்கி ஐயப்பாட்டினை நீக்குகின்றது.

சைவ சமய குரவர்கள் ஓதிய திருமுறைகளில் சிற்சில பதிகங்களில் திருப்பதியின் பெயர் ஒன்றாகவும், திருக்கோயிலின் பெயர் மற்றொன்றாகவும் உள்ளன. இஃது திருக்கடந்தையுள் தூங்கானை மாடக்கோயிலும், திருச்செங்காட்டாங்குடியில் கணபதீச்சரமும், கருவூரில் திருஆனிலையும் உள்ளன என்பவற்றால் அறியக்கிடக்கின்றது. இம்முறையின் படியே, கோவந்தபுத்தூரில் திருவிசய மங்கை உள்ளது என்பதையும் உய்த்துணர்க.

சேக்கிழார் அருளிச்செய்த திருஞானசம்பந்த அடிகள் புராணத்தில், அடிகள் யாத்திரையாக வந்த வரலாறு கூறுமிடத்துக் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள திருப்பழுவூரிலிருந்து, திருவிசயமங்கை வந்து கோதனம் வழிப்பட்ட குறிப்புள்ள திருப்பதிகம் ஓதி பின்னர்த் திருவைகாவையும் திருப்புறம்பயத்தையும் அடைந்ததாக * 238 முதல் 240 வரையுள்ள பாட்டுக்களில் விளங்குகிறது.

இதுதான் நேரான வழியாக உள்ளது. மண்ணியாற்றங் கரைக் கோயிலாயின் மேற்கிலுள்ள, திருவைகாவுக்கு முதலில் வந்துதான் விசயமங்கைக்கு வரநேரும். இதனால் கொள்ளிடத்தின் வட கரையிலுள்ளதே விசயமங்கை என்பது விளங்குகிறது.

முற்காலத்து நம்பிரானுக்கு இஞ்ஞான்று ஊர்தோறும் வடமொழிப் பெயர்களைப் புனைந்து வழங்குவது போலன்றி, நம் சமய குரவர்கள் எந்த ஊரில் வழிபாடாற்றுகிறார்களோ, அவ்வூரைச் சுட்டி நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள்ளார்கள். மழபாடியுளண்ணலே! புறம்பயம் அமர்ந்தோய்! ஒற்றியூருடைய கோவே! என்பனவாக வழங்குவதன்றி, ஓரிடத்தும், அச்சிட்ட தேவாரப் பதிகங்களின் ஈற்றில் வரையப்பட்டுள்ள பெயர்கள் அப்பதிகங்களில் காணப்

---

* 238 பாவின மிசைவழி
[illegible]
நியாவரும் தொழுதட
னேத்த வெய்தினர்
மூவலு குய்யநஞ்
சுண்ட மூர்த்தியார்
மேவிய பெருந்திரு
விசய மங்கையில்.

240 விசயமங் கையினிட
மகன்று மெய்யர்தா
ளசைவில்லை காவினி
லணைந்து பாடிப்போற்
றிசைவளர் ஞானசம்
பந்த ரெய்தினார்
இசையுடை யாடையார்
திருப்பு றம்பயம்.

படவே இல்லை என்பது திருமுறை பயிலுவார்க்கு நன்கு விளங்குவதாகும்.

இந்த முறையைப் பின்பற்றியே நம் சமய குரவர்கள் காலத்திற்குப் பிற்பட்டு, அரசர்களால் ஒவ்வோர் கோயில்களிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் நம்பிரானது பெயரைக்குறிக்குமிடத்து "திருவலஞ்சுழியுடைய மகாதேவர்க்கு" பட்டீச்சுரமுடைய மகாதேவர்க்கு என்று அவ்வவ்வூரினைக் குறித்து நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள்ளார்கள்.

இம்முறையே திருவிசய மங்கை என்னும் கோயிற் பெயரால் நம்பிரானது திருப்பெயர் குறிக்கப் பட்டிருத்தலைக் கோவந்த புத்தூர் கல்வெட்டுக்களில் இன்றும் யாவரும் காணலாம். கோவந்த புத்தூர் ஆலயக் கல்வெட்டுக்களில் விசயமங்கை யுடைய மகாதேவரென்றே குறிக்கப்பட்டிருக்கின்றது. இதனை யாரும் மறுப்பதற்கில்லை.

மேற்காட்டிப் போந்தவாறு திருத்தொண்டர் புராணத்தாலும், கல்வெட்டுக்களாலும் ஆராயுமிடத்துத் திருவிசயமங்கை என்னும் பதிகம் பெற்றது கோவந்த புத்தூரிலுள்ள சிவாலயமே என்பது வெள்ளிடை மலை போல் விளங்குவதாகும். மண்ணியாற்றங் கரையிலுள்ள சிவாலயத்தில் யாதொரு கல்வெட்டுக்களு மில்லை.

---

# திருக்கோகர்ண யாத்திரை

[பத்திராசிரியர்]

"**கா**ல்களாற் பயனென் கறைக்கண்டனுறை கோயில், கோலக்கோபுரக் **கோகரணம்** சூழாக், கால்களாற் பயனென்" என்று அப்பர் சுவாமிகள் கூறியுள்ளது அன்பர்கள் நினைவிலிருக்கும். கோகர்ணத்துக்கு மர்மகோவாவிலிருந்தும் இடையேயுள்ள ஹூப்ளியிலிருந்தும் செல்லலாம். சாதாரண காலத்தில் சென்னையிலிருந்து மர்மகோவாவுக்குப் போக வர ரயில் சார்ஜ் மட்டும் ரூ. 30க்கு மேலாகும். அடுத்த மாதத்தில்வரும் கிறிஸ்மஸ் விடுமுறையில் கோகர்ணம் செல்வதற்கு ரயில்வே சார்ஜ் மிகக் குறைவாக ஏற்பட்டுள்ளது. 400 ஆண்டுகட்குமுன் காலஞ்சென்ற கிறிஸ்தவ முனியாகிய அர்ச்சவேரியார் பருவுடலானது கோவாவில் பத்தாண்டுகட் கொருமுறை காட்டப்படுவது வழக்கம். இவ்வாண்டில் 3-12-31 முதல் 3-1-1932 வரை அவ்வாறு காட்டப்படும். அதற்காக ரயில்வே கம்பெனியார் போகவர அரை ரயில் சார்ஜ் திட்டம் செய்துள்ளார்கள். இந்த [illegible] 1922வது துக்குப் பிறகு இவ்வளவு [illegible]ட்டிருக்கிறது. எனவே திருக்கோகர்ண யாத்திரைசெய்ய விரும்பும் அன்பர்கள் உடனே ரிப்ளைகார்டு மூலம் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன். கோகர்ணம் போகும்வழி வரும் வழிகளில் வேறு பல தலங்களையும், நதிதீரங்களையும், காட்சிகளையும் கண்டு இன்புறலாம். மர்மகோவாவுக்குக் கீழ்வரும் ஸ்டேஷன்களிலிருந்து போகவர ரிட்டர்ன் டிக்கட்டு (20-11-31 முதல் 14-1-1932 வரை) விவரம் மூன்றாவது வகுப்புக்குக் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சென்னை | ... ... | ரூ. | 15 | 13 | 0 |
| பெங்களூர் | ... ... | ,, | 12 | 9 | 0 |
| திரிசிராப்பள்ளி | ... ... | ,, | 20 | 11 | 9 |
| மதுரை | ... ... | ,, | 23 | 5 | 9 |
| திண்டுக்கல் | ... ... | ,, | 22 | 5 | 0 |
| சேலம் | ... ... | ,, | 17 | 0 | 3 |
| கோயமுத்தூர் | ... ... | ,, | 20 | 1 | 3 |

12 வயதுக்குட்பட்டவர்கட்கு இதில் அரை சார்ஜ். மற்றொருமுறை இவ்வித சந்தர்ப்பம் கிடைப்பது அரிதாகையால் அன்பர்களும் தலயாத்திரைச் சங்கங்களும் முந்துக.

**மற்ற ஸ்டேஷன்கட்கு ஸ்டேஷன் மாஸ்டர்களைக் கேட்கவும்**

# திருவாசகம் நுண்மை பயில் கழகம்

இக்கழகத்தின் கக-வது கூட்டம் 4-10-31-ல் சமாஜக் காரியாலயத்தில் நடைபெற்றது. திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் "குலம்பாடிக் கொக்கிறகும்பாடி" என்ற திருத்தெள்ளேணச் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு கொக்கிறகும் என்பதிலுள்ள உம்மையின் நயத்தையும் நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி என்ற அடுக்கின் நயத்தையும் சிலம்பாடலின் நுட்பத்தையும் பலவகையாக விவகரித்து விளக்கினார்கள்.

## ம தி ப் பு ரை க ள்

**கோம்பி விருத்தம்** :—இரண்டாம்பதிப்பு, 64 பக்கம், விலை அணா 8. ஆசிரியர் ராவ் சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். இவ்வாசிரியரைத் தமிழ்நாடு நன்கறியும். இவர் கம்பராமாயணத்தை நன்கு பயின்றவர். இந்நூல் 74 விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்டது. பாக்களின் போக்கும், உவமைகள், வருணனைகள் முதலியனவும் கம்பராமாயணம் பாலகாண்டத்தில் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் முதலியவற்றை நினைவூட்டுகின்றன. பாலைபாடிய பெருங்கடுங்கோ என்ற சங்கப்புலவர் மீண்டும் பாலையைப் பாடத் தொடங்கினாரோ என்று இந்நூலின் முற்பகுதியைப் படிப்போருக்குத் தோன்றும். இந்நூலைப் பழைய ஏட்டில் எழுதி ஆசிரியர் இன்னாரென்று குறியாது ஒரு தமிழ்ப் புலவரிடம் கொடுத்தால் இது கம்பர் இயற்றியது என்றே அவர் திடமாகக் கூறுவர். ஒவ்வொரு தமிழறிஞரும் இந்நூலை வாசித்து இன்புறுக. இந்நூல் கிடைக்குமிடம், இவ்விரண்டாம் பதிப்பின் ஆசிரியராகிய திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் விலாசம், மாணிக்க வில்லா, கிம்மோரோட், சென்தோம், மயிலாப்பூர், மதராஸ்.

**உடற்பயிற்சி விளக்கம்** :—பக்கம் 88, விலை அணா 6, ஆசிரியர் திரு. ஆவி. சித. சொக்கலிங்கம், வலம்புரி, பொன்னமராவதி தபால். இவ்வாசிரியர் இச்சிறு நூலில் உடற்பயிற்சி முறைகளைத் தெளிவாக விளக்கியுள்ளார். இவர் உடற்பயிற்சி செய்து வன்மை பெற்றுள்ளவர். இவரும் தனவணிக நாட்டுப் பலவான் சோமசுந்தரனாரும் உடற்பயிற்சித் துறையில் நமது நாட்டுக்கு இரு கண்களாக விளங்குகின்றனர். வேண்டுவோர் இந்நூலாசிரியருக்கு எழுதுக.

**திருஅவிநாசி நான்மணிமாலை** :—ஆசிரியர் - திரு. தா. கா. ஆறுமுகம் பிள்ளை, பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவர், தாராபுரம். இம்..லை நாற்பது பாக்களால் யாக்கப் பெற்றது. பாடல்கள் சொல் நயமும், பொருட்செ..
வாசகம், திருக்குறள் முதலிய பெ...வும், நன்னடையும உடையன. தேவாரம, திரு
எடுத்து இவ்வாசிரியர் தக்கசு நூல்களின் வாக்குக்களை இடையிடையே நன்னவாறே
கிறது. வேண்டுவோர்..று பிரயோகம் செய்துள்ளது பெருமகிழ்ச்சியை விளைவிக்
இவ்வாசிரியருக்கு எழுதுக.

மதுரை..
குறி...த தேவாரம் ஈழநாட்டுப்பதிகங்கள் :—இதைத் தமது தாய் தந்தையர் நினைவுக்
..க யாழ்ப்பாணத்து சாவளை - வ. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இம்முறையைக் கடைப்பிடித்துத் தங்கள் தங்கள் ஊர் தேவாரம், தலபுராணம் முதலியவற்றை உறவினர் நினைவுக்குறிகளாகச் சமயப் பற்றுடைய பெரியார்கள் வெளியிடுதல் நல்லதொரு பணியாகும். இந்நூல் வேண்டுவோர் தபாற்கூலி அணா ஒன்றுமட்டும் அனுப்பி நம்மிடம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்**:—ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் - பக்கம் - 42 - விலை அணா 4. இந்நூலிலுள்ள பாடல்களும் குறிப்புரையும் இவ்வாசிரியர் அரசியல், சமயம், சமூகம் முதலிய துறைகளில் கொண்டுள்ள கொள்கைகள் குறிக்கோள்கள் முதலியவற்றைத் திறம்பட விளக்குகின்றன. இந்நூலின் பல பகுதிகள் செய்யுள் நயமும் இலக்கியச் சுவையும் பொருந்தியுள்ளன. இவ்வாசிரியரின் அறிவின் பக்குவம் இந்நூலில் கரைகடந்து வழிகின்றது. ஒவ்வொரு தமிழ் மகனும் இந்நூலைப் பெறுவது அவசியம். இராயப்பேட்டை ஸாதுவேல் பத்தகசாலைக்கு எழுதுக.